வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 15.07.2023 சனிக்கிழமை | இதழ் : 218 | பக்கங்கள் : 16








# குருந்தூர்மலை பொங்கல் வழிபாடு தேரர்கள் தலையீட்டால் நிறுத்தம்!

## பொலிஸாரும் குவிந்து இடையூறு

முல்லைத்தீவு, ஜூலை 15

**முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலை, ஆதிசிவன் ஆலயத்தில் நேற்று மேற்கொள்ளப்படவிருந்த பொங்கல் வழிபாடு, பௌத்த தேரர்கள் மற்றும் பொலிஸாரின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.**

குருந்தூர்மலை, ஆதிசிவன் ஆலயத்தில் நேற்று பொங்கல் வழிபாடுகளை முன்னெடுப்பதற்கான ஒழுங்குகளை பொது மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள குருந்தூர் விகாரை தரப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடவடிக்கைகளை முன்னெத்தனர்.

நேற்று ஆதிசிவன் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட உள்ள பொங்கல் வழிபாட்டு நிகழ்வைத் தடுத்து, பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க முன்வருமாறு, முல்லைத்தீவு குருந்தூர் விகாரையின் சந்தபோதி தேரர் முன்னதாக தெரிவித்திருந்தார்.

இதற்கமைய, தென்னிலங்கையில் இருந்து இரண்டு பஸ்களில் பிக்குகளுடன் சென்ற சுமார் 100 பேர் வரையிலானோர், குருந்தூர் விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதனிடையே, ஆதிசிவன் ஆலயத்தில், பொங்கல் வழிபாடுகளை

15

# நல்லூர் கந்தன் திருவிழாவுக்கு விசேட ரயில்!



யாழ்ப்பாணம், ஜூலை 15

நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவு நேர விசேட அதிசொகுசு கடுகதி சுற்றுலா தொடருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லூர் ஆலய திருவிழாவுக்காக வருகின்ற பக்தர்களின் நலன்கருதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணததுக்கு இரவுநேர விசேட அதிசொகுசு கடுகதி சுற்றுலா ரயில் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்-என்றார். (அ)

# நீதிமன்றம் அனுமதித்தும் பொங்கலை குழப்பிய இராணுவத்தினர், பொலிஸார்

## சித்தார்த்தன் எம்.பி. குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஜூலை 16

குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என நீதிமன்றம் உத்தரவு அளித்திருந்த நிலையிலும்கூட இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் பொலிஸார், பிக்கு ஒருவர் ஆகியோர் பொங்கல் செய்யும் இடத்துக்கு வந்து நிகழ்வை குழப்புகின்றார்கள். ஒருவர் இதற்கென்று விளம்பரங்கள் கொடுத்து சிங்கள மக்களை அழைத்து வந்து குழப்பத்தை ஏற்படுத்துகின்றார் என யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அவர் குருந்தூர் மலைக்கு சென்று பொங்கல் நிகழ்வில் கலந்து

15

# பொங்கல் தடை; பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூலை 15

முல்லைத்தீவு - குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய வழிபாட்டினை தடைசெய்தமை தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரால் நீதிமன்ற உத்தரவை மீறியும் பூசை

15

# வடக்கு சட்டத்தரணிகள் பிரிவினைவாதிகளாம்!

## சரத் வீரசேகர சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 15

வடக்கில் சட்டத்தரணிகள் தமக்கெதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டம், பணி நிறுத்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு சட்டத்தரணிகள் பிரிவினைவாதிகள் என்று அவர் அந்தக் கடிதத்தில் சாடியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தவையாவன:-

மாண்புமிகு நீதிமன்றத்தை அச்சுறுத்தியதாக நீங்கள் கூறுவதை நான் வன்மையாக

15

# யாழ்ப்பாணத்தில் விரைவில் தொழில் பயிற்சி நிலையம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வட மாகாணத்திற்கான வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்பை தேடிச் செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையம், யாழ். மாவட்டத்தில் நிறுவப்படவுள்ளதாகத் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு

15

# சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

கொழும்பு, ஜூலை 15

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவரவுள்ளதாக அந்தக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்து ஒவ்வாமை காரணமாக நாட்டில் பலர் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக அரசாங்கத்திடம் வினவினால், இது சாதாரண ஒரு நிகழ்வு என்று சுகாதார அமைச்சர் பதில் வழங்குகிறார்.

15

# பொதுவாக்கெடுப்பின் ஊடாக தமிழருக்கு சுயநிர்ணய உரிமை

## மோடிக்கு அனுப்பிய கடிதம் குறித்து சிவாஜி

யாழ்ப்பாணம், ஜூலை 15

பொதுவாக்கெடுப்பின் மூலம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுத் தரப்படவேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் இந்திய பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகள் தரப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தும் வகையில் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்த் தேசியக்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## ஹைஏஸ் மோதி வயோதிபர் மரணம்! தப்பிச் சென்ற சாரதி துரத்திப்பிடிப்பு

கொழும்பு, ஜூலை 15

வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

வீதியால் நடந்து சென்ற குறித்த நபரை பின்னால் வேகமாக வந்த ஹைஏஸ் வான் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பிரதேசத்தில் நேற்று காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பில் வசிக்கும் 77 வயதுடைய வி.பழனியப்பா என்ற நபரே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்ற ஹைஏஸ் வாகனத்தின் சாரதியை வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துரத்திப் பிடித்துள்ளனர்.

உயிரிழந்த வயோதிபரின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கேரள கஞ்சாவுடன் சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணப் பையில் 10 கிலோ கேரள கஞ்சாவை ஏற்றிச் சென்ற கடற்படைச் சிப்பாய் நேற்று கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் இருந்து கேரள கஞ்சாவை பஸ்ஸில் கொண்டு வருவதாக வவுனியா தலைமையக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவர்கள் பஸ்ஸை நிறுத்திச் சோதனையிட்டனர். இதன்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் தலா இரண்டு கிலோ எடையுள்ள 5 கேரள கஞ்சா பொதிகள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## நகர சபை மதில் உடைந்து வீழ்ந்து பணியாளர் மரணம்!

கொழும்பு, ஜூலை 15

பாணந்துறை நகர சபைக்குச் சொந்தமான மதில் ஒன்று உடைந்து வீழ்ந்த சம்பவத்தில் நகர சபையின் பணியாளர் ஒருவர் அதன் அடியில் சிக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய அஜித் குமார டி சில்வா என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாணந்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள நகர சபைக்குச் சொந்தமான குப்பை கொட்டும் இடத்தின் மதில் சுவருக்கு அருகில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த போது, குறித்த மதில் சுவர் இடிந்து அவரது உடல் மீது விழுந்துள்ளது.

அருகில் இருந்தவர்கள் உடனடியாக இடிபாடுகளை அகற்றி அவரை மீட்டு பாணந்துறை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும், சிகிச்சை பலனின்றி குறித்த நபர் உயிரிழந்தார். (அ)

# யாழ். பல்கலை. 37ஆவது பட்டமளிப்பின் முதல் பகுதி 19ஆம் திகதி முதல் 21 வரை

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 19ஆம், 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பு ஒன்று நேற்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில், பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவர் பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழா தொடர்பில் விளக்கமளித்தார்.

அங்கு, பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 162 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஆறு பேரும், முதுமெய்யியல்மாணி பட்டத்தை 04 பேரும், தூய சக்தி தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை 2 பேரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 56 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 86 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 05 பேரும், முகாமைத் துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 03 பேரும் பெறவிருக்கின்றனர்.

உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 113 பேர் மருத்துவமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும், மருத்துவ விஞ்ஞானமாணிப் பட்டத்தை ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 92 பேர் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் 28 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 119 பேர் விஞ்ஞானமாணிப் (பொது) பட்டத்தையும், 27 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி பட்டத்தையும், 21 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவர் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 116 பேர் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த 96 பேர் உயிர்முறைமைகளில் சிறப்புத் தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 93 பேர் பொறியியலில் சிறப்புத் தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும், 25 பேர் சித்த வைத்திய சத்திர சிகிச்சைமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 282 பேரும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 16 பேரும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 88 பேரும், வணிகமாணிப் (பொது) பட்டத்தை 03 பேரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன் கலைப்பீடத்தில் இருந்து பொதுக் கலைமாணி பட்டத்தை 217 பேரும், சட்டமாணி சிறப்புப் பட்டத்தை 69 பேரும் பெறவிருக்கின்றனர். சேர் பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தில் இருந்து நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) சிறப்புப் பட்டத்தை 135 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்திலிருந்து தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப்பட்டத்தை 54 பேரும், மருந்தகவியல் சிறப்புமாணிப் பட்டத்தை 55 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 58 பேரும் பெறவிருக்கின்றனர்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் (முன்னைய வவுனியா வளாகம்) பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 03 பேர் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 04 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டத்தையும், 6 பேர் விஞ்ஞானமாணிப் (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) பட்டத்தையும், 7பேர் விஞ்ஞானமாணிப் (சூழல் விஞ்ஞானம்) பட்டத்தையும், 10 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 10 பேர் சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், மேலும், 10 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறப்பு இளமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். வியாபாரக்கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 06 பேர் செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், ஒருவர் வியாபார முகாமைத்துவமாணிப் (பொது) பட்டத்தையும், 04 பேர் சந்தைப்படுத்தலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 30 பேர் கணக்கியல் மற்றும் நிதியியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 18 பேர் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 14 பேர் வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில் இருந்து முதன்முறையாக 52 பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறிய 56 பேர் சிறப்பு வணிகமாணிப் (வெளிவாரி) பட்டத்தையும், 26 பேர் வணிகமாணி (வெளிவாரி-3 வருடங்கள்) பட்டத்தையும், 84 பேர் வியாபார முகாமைத்துவமாணிப் (வெளிவாரி) பட்டத்தையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேலும், 33 பேர் தொழில்சார் ஆங்கிலத்தில் தகைமைச் சான்றிதழையும், 02 பேர் உடற்கல்வியில் தகைமைச் சான்றிதழையும், 05 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச்சான்றிதழையும், 20 பேர் நுண்நிதியியலில் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், மூவர் வியாபார முகாமைத்துவத்தில் உயர் தகைமைச் சான்றிதழையும், ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் தகைமைச் சான்றிதழும் பெறுவது உறுதிப்படுத்தப்படவுள்ளது.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற மாணவர்களும், அவர்கள் சார்பில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள வருகின்ற விருந்தினர்களும், ஏனையவர்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றது. பட்டமளிப்பு நிகழ்வுகளை நேரலையாக பல்கலைக்கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தகப் பக்கங்களினூடாகவும், பல்கலைக் கழகத்தின் இணையத்தளம் வாயிலாகவும் கண்டுகளிக்க முடியும்.

இப்பட்டமளிப்பு வைபவம் வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்கலைக்கழக சமூகம் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
15.07.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது மக்கள் ஆணை?

இந்திய பிரதமருக்கான ஆறு கட்சிகளின் கடிதத்தில் சம்பந்தன் கையெழுத்திடவில்லை. இந்தியாவிடம் 13ஆவது திருத்தச்சட்டத்தை மட்டும் கோருவதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை - அதன் காரணமாகவே அவர் கையெழுத்திடவில்லையென்று, தமிழரசு கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. எனினும், சம்பந்தன் இரட்டை நிலைப்பாட்டில் இருக்கிறார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் ஆணை வழங்கவில்லையென்று கூறுவது சரியானதொரு வாதமா? ஒருவேளை மாகாண சபை தேர்தலில் பங்குகொள்ளாத கட்சியொன்று அவ்வாறு கூறினால் அதில் நியாயமிருக்கலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை தேர்தல்களில் போட்டியிட்டிருந்தது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் ஒப்பீட்டடிப்படையில் அதிகளவான தமிழ் மக்கள் மாகாண சபை தேர்தல்களின் போது வாக்களித்திருக்கின்றனர்.

இந்த நிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை கோருவதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லையென்று கூறுவதானது மக்களது நலன்களுக்கு முற்றிலும் எதிரானதாகும். தற்போதுள்ள மாகாண சபை முறைமை பலப்படுத்தப்படவேண்டும், இந்திய பிரதமர் மோடி கூறுவது போன்று, நாம் ஓர் ஒத்துழைப்புடன்கூடிய சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும். இதில் எமக்கு எவ்வித முரண்பாடும் இல்லை. உண்மையில் அதுதான் நம்மனைவரதும் இலக்காக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் பல்வேறு பிரச்னைகளை கையாளுவதற்கு சமஷ்டியே இறுதியானது என்பதே எமது நிலைப்பாடாகும் - ஆனால், அதற்காக இருப்பதை உச்சளவில் பயன்படுத்த மறுப்பதே தவறானது. அதனை கோருவதற்கான உரிமையை மறுதலிப்பதுதான் தவறானது.

13 விடயத்தை இலங்கையிடம் கோர முடியும். அதனை வெளியார் ஒருவரிடம் கோர முடியுமென்றால், அந்த நாடு இந்தியா மட்டும்தான். ஏனெனில், இந்தியாவால் மட்டுமே அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும். மேற்கு நாடுகளால் அதனை வலியுறுத்த முடியாது. அவர்களின் எல்லை மனித உரிமை மீதான கரிசனையுடன் மட்டுப்பட்டது. எனவே, இரட்டை நிலைப்பாட்டை விடுத்து சம்பந்தனும் தமிழரசு கட்சியும் மக்களின் நலனை கருத்தில்கொண்டு செயல்பட முன்வர வேண்டும்.

மக்கள் ஆணை தொடர்பில் பேச முற்படுவது கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு கல்லெறிவதற்கு ஒப்பானது. ஏனெனில், தமிழ் தேசிய கட்சிகள் காலத்துக்கு காலம் பல்வேறு நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. அவ்வாறான நிலைப்பாடுகள் மக்கள் ஆணையின் அடிப்படையிலா எடுக்கப்பட்டது? தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகளும் ஒரே மாதிரியாகவா இருந்திருக்கின்றது? 2009இற்கு முன்னரான கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் அதன் பின்னரான விஞ்ஞாபனங்களையும் உற்று நோக்கினால் வேறுபாடுகளை காணலாம்.

2008இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவில்லை. பிரிக்கப்பட்ட மாகாண சபையில் போட்டியிடுவதில்லையென்று கூறியது. ஆனால், 2012இல் கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. இந்த மாற்றம் எவ்வாறு ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது? இன்றுவரையில் சம்பந்தன் இது தொடர்பில் மக்களுக்கு பொறுப்புச் சொல்லவில்லை. மக்கள் ஆணையென்று கூறி, மக்களுக்கான வரலாற்று பணியை முன்னெடுக்காது, விலகிநிற்க முடியாது. மக்கள் ஆணையென்பது மக்களது நலன்களுக்கானது. அது கட்சிகளுக்கானதல்ல.

# சகல துறைகளிலும் உரிய நியமம் கட்டாயம் பின்பற்றப்படவேண்டும்

## நெடுந்தீவில் அதிகாரிகளுக்கு டக்ளஸ் அறிவுறுத்து



*யாழ்ப்பாணம், ஜூலை 15*

*நாரா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்படாத பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்ற உள்ளூர் இழுவைப் படகுகள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கடற்படை மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.*

*நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், உள்ளூார் இழுவைப் படகுகளினால் பாதிப்பு ஏற்படுவதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் முறையிட்ட நிலையிலேயே, குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் முகவர் நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட சேற்று நிலப் பகுதிகளில் மாத்திரம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு உள்ளூர் இழுவைப் படகுகளுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நெடுந்தீவு கடல் பகுதியில் அடையாளப்படுத்தப்படாத பகுதிகளிலும் குறித்த உள்ளூர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் தமது கடல் வளத்தை அழிப்பதாக நேற்று குற்றஞ்சாட்டப்பட்டது.*

*இதேவேளை, நெடுந்தீவு மக்களுக்கு 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மின்பிறப்பாக்கிகள் சுழற்சி முறையில் மாற்றப்படுகின்றபோது நேர ஒழுங்கு பின்பற்றப்படவேண்டும் எனவும வலியுறுத்தியுள்ளார்.*

*அதேபோன்று எரிபொருட்களின் விலை, நாடளாவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிகபட்சம் 20 ரூபாய் அதிமாக மாத்திரமே விற்பனை செய்ய முடியும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எரிபொருள் விற்பனை தொடர்பாக மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலாளரை கேட்டுக் கொண்டார்.*

*நாட்டின் ஏனைய பிரதேசங்களைவிட சுமார் 45 ரூபாய் வரையில் விலை அதிகரித்து நெடுந்தீவில் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக பிரதேச மக்களினால் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையிலேயே அமைச்சரினால் மேற்குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே நெடுந்தீவில் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுகின்றபோது, உரிய சட்ட நியமங்கள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*கடந்த காலங்களில், பிரதேச சபை மற்றும் மிருக வைத்திய அதிகாரி போன்ற எவற்றின் அனுமதிகளும் பெறப்படாமல் தான்தோன்றித்தனமாக மாடுகள் வெட்டப்படுவதாக பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் சுட்டிகாட்டப்பட்ட நிலையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*நெடுந்தீவு பிரதேசத்திற்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.*

*நெடுந்தீவு பிரதேச செயலாளரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில், பிரதேசத்தின் கடல் போக்குவரத்து சுற்றுலாத்துறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.*

*இதன்போது மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.*


*மேலும் துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத்துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.*

*குறிப்பாக சுகாதாரம், கல்வி, வீட்டுத்திட்டம், உள்ளூராராட்சி, கூட்டுறவு, நீர்வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சமுர்த்தி, விவசாயம், நீர்ப்பாசணம், வாழ்வாதாரம், மீன்பிடி, வீதி புனரமைப்பு, காணி உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இதில் , பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கன்னி**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் வலியவந்து உதவுவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன்வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார் வியாபாரம் தழைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கும்பம்**
திட்டவட்டமாக சிந்தித்து காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாப மடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். துணிச்சல் அதிகரிக்கும் நாள்.

# தி. மு. கவினரின் ஊழல் பட்டியலின் இரண்டாம் பாகம் தயாராகவுள்ளது



## பா. ஜ. க. அண்ணாமலை

*சென்னை, ஜூலை 15*

ஊழல் பட்டியலின் 2ஆவது பாகம் தயாராக உள்ளது என்று பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தி. மு. க. பிரமுகர்கள் 12 பேரின் சொத்து பட்டியலை தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி. மு. கவினர் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளையும் அவர் முன்வைத்தார்.

இந்நிலையில், சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அண்ணாமலை மீது முதல்வர் மு. க. ஸ்டாலின் சார்பில் குற்ற அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினரும், தி. மு. க. பொருளாளருமான டி. ஆர். பாலு, அண்ணாமலைக்கு எதிராக சென்னை சைதாப்பேட்டை 18ஆவது நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கில் நேற்று அண்ணாமலை முன்னிலையானார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“ஊழலுக்கு எதிராக மூன்றாம் தலைமுறைக்கும் முதல் தலைமுறைக்கும் யுத்தம் நடந்து வருகிறது. தி. மு. க. கோப்புகளை கடந்த ஏப். 14ஆம் திகதி வெளியிட்டத்தில் இருந்து அனைத்து தி. மு. கவினரும் கோபத்தில் இருந்தார்கள். டி. ஆர். பாலு முன்னதாகவே நீதிமன்றத்தில் வந்து சத்திய பிராமணம் செய்து விட்டு சென்றிருக்கிறார். மூன்று நிறுவனங்களில் மட்டும்தான் பங்குதாரராக இருக்கிறேன் என்று டி. ஆர். பாலு சொல்லி இருந்தார். பா. ஜ. க. வழக்கறிஞர்கள் அணி பாலமாக உள்ளது. இன்றுதான் அதை பார்த்தேன்

தி. மு. க. ஊழல் பட்டியல் தொடர்பாக பாகம் இரண்டு தயாராக உள்ளது. பினாமி பெயரில் வாங்கி இருக்கக் கூடிய பட்டியல்கள் இருக்கின்றன. அவர்கள் சமூகத்தில் முக்கிய பொறுப்புகளில் இருக்கிறார்கள். நான் வெளியிட இருக்கிற பினாமிகள் அனைவரும் தி. மு. கவினருக்கு சொந்தமானவர்கள்தான். இரத்த சொந்தமும் இருக்கிறது. இது சம்பந்தமான புகைப்படங்கள் இருக்கின்றன. பாகம் 2 பாதயாத்திரைக்கு முன்பாக ஜூலை மாதத்துக்குள் வெளியிடப்படும்.” - என்றார். (ஐ)

# “பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் போட்டியிட்டால் தோல்வியடைவார்”

*பழநி, ஜூலை 15*

பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் போட்டியிட்டால் நிச்சயம் தோல்வி அடைவார் என்று பழநியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

பழநியில் பழனி கோயிலின் பாரம்பரியத்தை பாதுகாத்திட வேண்டும் என்றுகூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று முன்தினம் இரவு நடந்த பொதுக்கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆளுங்கட்சி போல் செயல்படுகிற தோற்றத்தை பா. ஜ. க. உருவாக்க முயற்சிக்கிறது. பழநி முருகன் கோயிலுக்கு இந்து அல்லாதோர் வரக்கூடாது என கூறி வருகின்றனர். வழிபாட்டு தலங்களை பொறுத்தவரை யார் வேண்டுமானாலும் செல்லலாம்.

அங்கு இழிவுப்படுத்தும் செயலைத்தான் அனுமதிக்க முடியாது. எனவே மத அடிப்படையில் இதை ஒரு பிரச்னையாக கொண்டுபோய் விடுவது கண்டனத்துக்குரியது. தமிழகத்தில் இந்து அறநிலையத் துறையே இருக்கக்கூடாது. அதை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கூறுவது அநாகரிகமானது. புதுச்சேரியில் கோயில் சொத்துக்களை அபகரித்ததாக பா. ஜ. க. எம்எல்ஏக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக அறநிலையத்துறை தான் கோயில் சொத்துகளை பாதுகாத்து வருகிறது. பழநி கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சிப்காட் அமைக்க பா. ஜ. க. எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

சிப்காட் அமைந்தால் நாட்டின் உற்பத்தி உயரும். ஆயிரக்கணக்கானோருக்கு வேலை கிடைக்கும். பழநியில் ஒரு பதற்றமான நிலையை உருவாக்க பா. ஜ. க. முயற்சி செய்கிறார்கள் - என்றார்.

# தி. மு. கவின் திறமையற்ற ஆட்சியால் பல்வேறு இன்னல்களில் பொதுமக்கள்

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

*சென்னை, ஜூலை 15*

தி. மு. க. ஆட்சியின் திறமை இன்மையால், மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அ. தி. மு. கவின் மதுரை மாநாடு ஓகஸ்ட் 20ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தொண்டர்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.

அதில், குடும்ப நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு கட்சியையும், ஆட்சியையும் நடத்திவருபவர்களுக்கு மத்தியில், “இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்” என்று வாழ்ந்து மறைந்த வரலாற்று நாயகர் எம்.ஜி. ஆரால், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்ட மாபெரும் மக்கள் இயக்கம்தான் அ. தி. மு. க. பெரியார், அண்ணா, எம். ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற, தமிழர் நலனுக்காகத் தங்களையே அர்ப்பணித்த மகத்தான தலைவர்களின் வழியில் சமத்துவ, சமதர்ம சமுதாயம் உருவாகிடப் பாடுபடும் ஒரே இயக்கமும் அ. தி. மு. கதான்.

அ. தி. மு. க. ஆட்சிக் காலங்களில், மக்கள் எவ்வித இன்னல்களுக்கும் ஆளாகாத வகையில் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆனால், தற்போதைய திமுக ஆட்சியின் திறமை இன்மையால், மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதை நாம் அனைவரும் கண்கூடாகப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் விரைவில் விடிவு காலம் பிறக்க வேண்டும் என்றால் அது, தமிழக மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் மட்டுமே முடியும் - என்றுள்ளது. (ஐ)

# சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டும்

## விமல் வீரவன்ஸ வலியுறுத்து

**கொழும்பு, ஜுலை 15**

**"சுகாதாரத்துறைமீதான நம்பிக்கையை கேள்விக்குறியாகியுள்ள சுகாதார அமைச்சர், மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் உடன் பதவி விலக வேண்டும்." என்று வலியுறுத்தியுள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சரவை உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஆனால், நடைமுறையில் நிலைமை எதிர்மறையாக உள்ளது. பொருளாதாரப் பாதிப்பின் ஒட்டுமொத்த சுமையும் நடுத்தர மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.



நாட்டில் இலவச சுகாதார சேவை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மருந்து தட்டுப்பாடு நெருக்கடி தோற்றம் பெற்றவுடன் அவசர கொள்வனவு முறையில் திறந்த விலை மனுக்கோரல் இல்லாமல் மருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து அவசர கொள்வனவு முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பில் பாரிய சர்ச்சை தோற்றம் பெற்றுள்ளது. மருந்து தட்டுப்பாடு மற்றும் தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர் சிறுபிள்ளை போல் கருத்துரைக்கிறார்-என்றார். (அ)

# மலையகத்தில் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, தாதியர் கல்லூரி பல்கலைக்கழக கல்லூரி அமைய இந்தியா உதவ வேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 15

மலையகத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தாதியர் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி அமைய இந்தியா உதவிட வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

கொழும்பு அவிசாவளை முதல் நுவரெலியா வரை நாடெங்கும் பரந்து வாழும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக தமிழரின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி ஆகியவை தொடர்பில், இந்திய மத்திய அரசு, உதவிட உத்தரவாதம் தர வேண்டும்.

மலையகம் - 200 நினைவுறுத்தல் தொடர்பில் இந்தியாவின் பங்களிப்பு இந்த அடிப்படைகளில் அமைய வேண்டும். இவ்வருட ஆரம்பத்திலேயே நாம் இந்திய தூதுவர் கோபால் பாகலேயிடம், மலையகம் - 200 நினைவுறுத்தல் நிகழ்வுகள் உரையாடி தொடர்பில் எழுத்துமூல கோரிக்கை விடுத்துள்ளோம். இலங்கை வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடமும் உரையாடியுள்ளோம். இந்நிலையில், அடுத்தவாரம், இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், இவை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நல்லெண்ண உத்தரவாதங்கள் அளிப்பார் என நாம் நம்புகின்றோம்.

கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில், இந்திய மத்திய அரசை நாம் நம்பி உள்ளோம். குறிப்பாக, நாடெங்கும் பரந்து வாழும், இந்திய வம்சாவளி மலையக தமிழர் பிள்ளைகளின் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை.

இந்தப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்க, விசேட வேலைத்திட்டம் தேவை. அதேபோல், தேயிலை, இறப்பர் மலைகளில் அல்லலுறும் எங்கள் பெண்களின் வெளிநாட்டு, உள்நாட்டு வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்த தாதியர் பயிற்சி கல்லூரி அவசியம். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வியை அடிப்படையாகக் கொண்டு ஒரு முதற்கட்ட பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கான விசேட சமூக அபிவிருத்தி திட்டங்களாக முன்னேடுக்கப்பட வேண்டும். மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் நமது மக்கள் தொடர்பில் தமக்குள்ள தார்மீகக் கடப்பாட்டை இந்திய மத்திய அரசு நிறைவேற்றும் என நாம் நம்புகின்றோம்.

அதேவேளை, இலங்கையில் மலையக தமிழரின் அரசியல் அபிலாஷை கோரிக்கைகள் தொடர்பில் நாம் உள் நாட்டில் இலங்கை அரசுடன் பேசுவோம். அதிகாரபூர்வ அரசு தரப்பு பேச்சு குழுவை முறைப்படி அமைத்து, அத்தகைய பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதி ரணில் எம்மிடம் உறுதி அளித்துள்ளார். அந்த உறுதி மொழியை அவர் நிறைவேற்று வார் என நாம் நம்புகின்றோம்-என்றார்.

# விசேட தேவையுடைய மாணவர்களை பாடசாலைகளில் இணைக்க ஏற்பாடு

கொழும்பு, ஜுலை 15

விசேட தேவையுடைய மாணவர்களையும் அரச பாடசாலைகளின் சாதாரண வகுப்புக்களில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நீலமணி மலவீ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

வலயங்களிலுள்ள பணிப்பாளர்களின் அனுமதியுடன் விசேட தேவையுடைய மாணவர்கள் வகுப்புகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட வுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் இணைத்துக்கொள்ளப்படுவது வரலாற்றில் முதல் தடவை என்பதோடு, அவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் வரப்பிரசாதமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

விசேட தேவையுடைய மாணவர்கள் இதுவரை சிறப்பு பிரிவுகளிலேயே கல்வி கற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் நீலமணி மலவீ ஆராச்சி தெரிவித்துள்ளார். (அ)

# 18 இல் பாராளுமன்று கூடுகிறது

கொழும்பு, ஜுலை 15

பாராளுமன்றம் ஜுலை 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கூடுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்போது சுங்கச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியவை விவாதிக்கப்பட உள்ளன.

மேலும், ஊழலுக்கு எதிரான மசோதா மற்றும் குற்றச் சட்டத்தின் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் ஆதரவு மற்றும் பாதுகாப்பு தொடர்பான வாய்ப்பு விவாதத்தை நடத்த குழு முடிவு செய்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் கீழ் பிரேரணைக்கு விவாதம் இன்றி அங்கீகாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்கி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதமும் எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் நடைபெறும் என திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தொழிலாளர்களின் கடமை நேரம் 12 மணித்தியாலங்களாக உயரும்

## எச்சரிக்கிறார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, ஜுலை 15

தொழிலாளர் சட்டத்தை திருத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறை யிலிருக்கும் தொழிலாளர் சட்டத்தை முழுமையாக மீறும் வகையிலேயே இந்தச் சட்டத் திருத்தங்களுக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனூடாக தனியார் தொழிற்சாலை நிர்வாகங்கள் அவர்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்களை எடுக்க முடியும் என்பதுடன் 08 மணித்தியால கடமை நேரம் 12 மணிநேரமாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இவ்வாறு அநீதியான முறையில் சட்ட திருத்தங்களை மேற்கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கடமை நேரத்தை 12 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு இடமளிக்க போவதில்லை என்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்-

தொழிலாளர் சட்டத்தை திருத்துவது தொடர்பில் அரசாங்கத்தால் யோசனையொன்று முன்வைக்கப் பட்டுள்ளது. சாதாரண தொழிலாளர்களுக்கு அநீதி ஏற்படும் வகையிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தொழில்புரியும் இடங்களில் சேவையாற்றுவதற்காக தொழிலாளர்களுக்கு இருக்கும் உரிமை, தேவையான நேரத்தில் அவர்கள் வெளியேற்று வதற்கு இருக்கும் உரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சட்டத்தை முழுமையாக ஓரங்கட்டிவிட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்றவாறு சட்டங்களை உருவாக்கும் நிலைமையே இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொழில்புரியும் தொழிற்சாலைகளின் பிரதானி களினால், தொழிலாளர்களுடன் தனியான ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளக் கூடியவாரான ஏற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்த ஒப்பந்தங்களில் தொழிலாளர்கள் கட்டாயம் கையொப்பமிட வேண்டி ஏற்படும். அதில் கையொப்பமிட்டதன் பின்னர் சாதாரண தொழிலாளர் சட்டம் நடைமுறையில் இருக்காது.

எனவே, அதனூடாக தொழிலாளர்களை அவர்களுக்கு தேவை ஏற்படும் நேரத்தில் தொழிற்சாலையிலிருந்து நீக்குவதற்கும் அவர்களுக்கு ஏற்றவாறு தொழில்புரியும் காலத்தை தீர்மானிப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

குறிப்பாக, பல்வேறு போராட்டங்களின் பின்னரே தற்போது நடைமுறையில் இருக்கும் 08 மணிநேர பணியை பெற்றுக் கொண்டோம்.

அவ்வாறு இருக்கையில், தேவை ஏற்படும் பட்சத்தில் 12 மணிநேரம் சேவையாற்றுவதற்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையில் பாரிய குறைபாடுகள் இருக்கின்றன.

இந்த யோசனைகளினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். மேலும், 08 மணிநேர தொழில்புரியும் காலத்தை பாதுகாப்பதற்கு எங்களால் முடிந்த சகல முயற்சிகளையும் எடுப்போம்-என்றார். (அ)

# பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையைத் திறந்துவிடவுள்ளோம்!

## இந்திய வர்த்தகர்கள் மத்தியில் ஜனாதிபதி

**கொழும்பு, ஜூலை 15**

**பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையை உலகிற்கு திறந்துவிட எதிர்பார்த்துள்ளதாகவும், அது தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள் விரைவில் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**இலங்கையை அதிக போட்டித்தன்மை கொண்ட பொருளாதார முறைக்கு கொண்டு செல்வது தனது எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி, பசுமை மற்றும் டிஜிற்றல் பொருளாதாரத்தின் ஊடாக வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.**

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார சுபீட்சத்திற்கான பாதையில் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைத் தொடர இலங்கை எதிர்பார்க்கிறது என்றும், இந்திய பொருளாதாரத்தை முன்னேற்ற பிரதமர் மோடி மேற்கொண்டு வரும் நிதிக் கொள்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி-

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் சுமார் எழுநூறு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமானது. கேரளாவில் இருந்து இலங்கைக்கு வியாபாரம் செய்ய வந்த வரலாறு நமக்கு உண்டு. நவகமுவில் உள்ள பத்தினி ஆலயம் கேரள மக்கள் இந்நாட்டிற்கு வந்து வர்த்தகம் செய்யும்போது கட்டப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ஆசியப் பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடாக இந்தியா தனது அதிகாரத்தை நிலைநாட்டியுள்ளது. ஆனாலும், மேற்கு ஆசிய நாடுகளும் பலமாக மாறியிருப்பதும் சிறப்பு வாய்ந்தது. இந்தியா போன்ற பலம் வாய்ந்த நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் நன்மை பயக்கும். பிரதமர் மோடி மேற்கொண்ட நிதிக் கொள்கையால், பொருளாதாரத்தில் இந்தியா முன்னேற முடிந்தது. அந்த நிதிக் கொள்கைகள் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்துக்கும் உதவக்கூடியதாக அமைந்துள்ளது.

நான் இலங்கையை மிகவும் போட்டி நிறைந்த பொருளாதாரத்துக்கு கொண்டு செல்லவே விரும்புகிறேன். பசுமைப் பொருளாதாரம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் இலங்கையின் பொருளாதார நிலையை வலுவான நிலைக்கு உயர்த்த முடியும். அதற்கு சட்ட விதிகள் அவசியம். போட்டி, பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு தேவையான சட்டங்களை எதிர்காலத்தில் சீர்திருத்த எதிர்பார்க்கின்றோம்.

நமது பொருளாதாரத்தை வலுப்படுத்த, இந்தியாவுடன் நெருங்கிய உறவை வைத்திருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது. இரு நாடுகளுக்குமிடையில் புதிய உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு அதற்கான துறைகளை அவற்றில் ஈடுபடுத்த வேண்டும்.



இலங்கையில், இந்திய ரூபாயின் புழக்கம் குறித்து இங்கு கூறப்பட்டது. இந்திய ரூபாய் மட்டுமல்ல டொலரும் புழக்கத்தில் இருந்தால் அது இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமையும். இலங்கையில், இந்திய ரூபாய் புழக்கத்தில் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம். ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், அது உலகிற்கு திறந்துவிடப்பட வேண்டும். அது தொடர்பான அவசர சட்ட சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படும்-என்றார். (அ)

# அரசின் செலவினங்களை கட்டுப்படுத்த நடைமுறை

கொழும்பு, ஜூலை 15

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய அரசாங்க வருமானத்தை ஈட்டுவதற்கும் முறையான வழிமுறைகள் உடனடியாக அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு நிதி ஒழுக்கம் இன்றியமையாதது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அரசாங்கம் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாவிற்கும் அதிகபட்ச பெறுமதி பெறப்பட வேண்டும் எனவும், ஆனால் அது பெரும்பாலும் அரசாங்க செலவீனத்தில் இடம்பெறுவதில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் வருமானத்தை மறந்துவிடுவது மாத்திரமன்றி, எந்தவொரு பயனும் இல்லாத செயற்பாடுகளுக்காக பொதுமக்களின் பணத்தை வரம்பற்ற முறையில் செலவிடுவதே இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

புதிய அரச வருமானத்தை உருவாக்குவதற்கான உத்திகளை கண்டறிய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 21 வயது யுவதியின் மரணம் ஆராய ஐவர் அடங்கிய குழு

கொழும்பு, ஜூலை 15

பேராதனை போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற 21 வயதான யுவதியின் சந்தேகத்திற்கிடமான மரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழு இன்று பேராதனை வைத்தியசாலைக்கு சென்று விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எவ்வாறாயினும், யுவதிக்கு வழங்கப்பட்ட ஊசி, மரணத்தை ஏற்படுத்தவில்லை என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த விடயத்தை விஞ்ஞான பூர்வமாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க குறித்த விசாரணைக்குழுவிற்கு இயலுமானதாக இருக்கும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

குறித்த ஊசி செலுத்தப்பட்ட மேலும் 12 பேர் தற்போதும் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

21 வயதான சமோதி சந்தீபனி வயிற்றுப்போக்கு காரணமாக கடந்த வாரம் கெட்டப்பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்று இரவு அந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, கடந்த திங்கட்கிழமை காலை பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

அவருக்கு ஊசி ஏற்றப்பட்டதன் பின்னர் நிலைமை மோசமடைந்து அவர் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# அரச ஊழியருக்கு சம்பளமற்ற விடுமுறை: ஓய்வூதியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாது

கொழும்பு, ஜூலை 15

அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்குவது தொடர்பான நடைமுறைகள் குறித்த சுற்றறிக்கையை அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, சம்பளமற்ற விடுமுறையை பெற்றுக்கொள்ளும் அரச ஊழியர்களுக்கு தொழிலுக்காக வெளிநாடு செல்வதற்கு அல்லது உள்நாட்டில் தங்கியிருப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும்போது, சேவை மூப்பு மற்றும் ஓய்வூதிய சம்பளத்திற்கு பாதிப்பு ஏற்படாது எனவும், அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மருத்துவர்கள் ஓய்வுபெறும் வயதை 63 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 15

அமைச்சரவை உபகுழுவின் அறிக்கையின் அடிப்படையில், 2024 வருட இறுதி வரை மருத்துவர்களின் ஓய்வு பெறும் வயதை 63 வரை நீடிப்பதற்கும் விசேட சந்தர்ப்பங்களில் சுகாதார அமைச்சின் தேவைகளுக்கு ஏற்ப அது தொடர்பில் மேலதிக தீர்மானங்களை எடுப்பதற்கும் சுகாதார அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை தாதியர் ஆட்சேர்ப்பின்போது கலைப் பிரிவு படித்தவர்களையும் தாதியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளும் வகையில் விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுகாதார அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார். (அ)

# 2,400 கிராம அலுவலர்களுக்கு நாடளாவிய ரீதியில் வெற்றிடம்

கொழும்பு, ஜூலை 15

நாடளாவிய ரீதியில் 2,400 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை விரைவில் சேவையில் இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்தி, நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட விடயங்கள் கிராம சேவை மட்டத்திலேயே மேற்கொள்ளப்படுவதன் காரணமாக கிராம உத்தியோகத்தர்கள் மிக முக்கியமான அரச அதிகாரிகளாக காணப்படுவதாக அவர் கூறினார்.

ஆகவே, கிராம உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அனைத்து விதமான அபிவிருத்தி செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்தும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால், புதிய நபர்களை விரைவில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த குறிப்பிட்டார்.

அவ்வாறல்லாத பட்சத்தில், கிராம உத்தியோகத்தராக செயற்பட விரும்பும் அரச அதிகாரிகளை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# காணாமல்போன டென்மார்க் பெண் பொத்தபிட்டியவில் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூலை 15

காணாமல்போயிருந்த டென்மார்க் நாட்டை சேர்ந்த பெண் இன்று பொத்தபிட்டிய அலகல்ல மலையடிவாரத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மலை ஏறச் செல்வதாகக் கூறி விடுதியில் இருந்து வெளியேறிய குறித்த பெண் மீண்டும் விடுதிக்கு திரும்பவில்லை என விடுதி உரிமையாளர் பொலிஸாரிடம் தகவல் வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில், முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், அவர் மலை ஏறுவதாக அறிவித்திருந்த வனப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வெளிநாட்டு பெண்ணின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கர்ப்பவதிகளுக்கு போசாக்கு மிக்க உணவு கிடைப்பதை அரசு உறுதி செய்யவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 15

நாட்டின் அனைத்து கர்ப்பவதி தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்கு உரிய போசாக்கு கிடைக்கப்பெறுவதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும் என சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்தியுள்ளது.

கர்ப்வதி தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு உரிய போசாக்கு கிடைக்கப் பெறுவதில் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பில் சர்வதேச மன்னிப்பு சபை ஆய்வை முன்னெடுத்திருந்தது.

கர்ப்பவதிகளின் போசாக்கை அதிகரிப்பதற்கான அரசாங்க திட்டங்களும் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நிலையில், வருமானம் வீழ்ச்சியடைந்தமை, தொழில்கள் இழக்கப்பட்டமை, பணவீக்கம் ஆகியன பெண்களின் கொள்வனவு சக்தியை பாதித்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாரின் நலன்கள் மற்றும் ஆரோக்கியத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுக்கான அதிகரித்த செலவு, திரிபோஷா தொடர்ச்சியாக கிடைக்கப்பெறாமை, அரசாங்க திட்டங்களின் மூலம் வழங்கப்பட்ட வவுச்சர்களை பயன்படுத்த முடியாமை உள்ளிட்ட காரணிகள் தமது ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக இந்த ஆய்வில் பங்கேற்ற பெண்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக பரிந்துரைக்கப்பட்ட நாளாந்த உணவுப் பொருட்களுக்கு பதிலாக, அந்நேரத்திற்கான உணவுகள் குறித்து மாத்திரமே அக்கறை செலுத்தியதாகவும் சிலர் ஆய்வில் கூறியுள்ளனர்.

நாளாந்தம் மூன்று வேளை உணவை உண்பதற்காக சிலர் தமது ஒருவேளை உணவின் அளவைக் குறைத்துள்ளதுடன், மேலும் சிலர் தமது நாளாந்த உணவு வேளைகளை இரண்டாகக் குறைத்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படாவிட்டால், உணவு பாதுகாப்பின்மையும் போசாக்கு பற்றாக்குறையும் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளிடையே நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியாவுக்கான பிரதி பிராந்திய பணிப்பாளர் தினுஷிகா திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

போதுமான கொள்வனவு சக்திக்கு உட்பட்ட, தரமான ஊட்டச்சத்து கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு கிடைப்பதை உறுதி செய்தல் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமைகளை இலங்கை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# கட்டுநாயக்காவில் ரஜினிகாந்த்!

கொழும்பு, ஜூலை 15

சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சில மணித்தியாலங்கள் தரித்து நின்றபோது, எடுத்த புகைப்படங்கள் வைரலாகியுள்ளது.

அவர் நேற்று பிற்பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இலங்கை ஊடாக வேறு நாடுக்கு பயணித்தபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சில மணி நேரம் தங்கியிருந்தார்.

அவர் நேற்றுப் பிற்பகல் 11.30 மணியளவில் இந்தியாவின் சென்னையில் இருந்து புறப்பட்ட சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார். (அ)




# 133ஆவது தொல்லியல் தினம் யாழ்ப்பாணக் கோட்டையில்



யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கை தொல்லியல் திணைக்களம் ஆரம்பமாகி 133 ஆவது ஆண்டினை முன்னிட்டு தொல்லியல் தினம் யாழ். கோட்டையில் நேற்று நடைபெற்றது.

இது ஒரு மரபுரிமைசார் விழிப்புணர்வு நடவடிக்கையாக யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை மற்றும் கலாசார சுற்றுலாத்துறை மாணவர்களுக்கு தொல்லியல் செயற்பாடுகளில் பயன்படுத்தபடும் முறைமைகள் குறித்த பயிற்சிகளை வழங்கி மாணவர்களை குறித்த துறைசார் நிபுணர்களுக்கு மாற்றுகின்ற செயல்பாடாக இது அமைந்துள்ளது.

இதன்பொழுது மேலாய்வு, மேலாய்வு ஜிபிஎஸ் முறை, அகழ்வாய்வுக்கு பயன்படுத்தப்படும் கருவிகள் அகழ்வாய்வு பிரயோகம் ஆகியவற்றை உள்ளடக்கி இப்பயிற்சி காணப்படும்.

நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்ட இதன் ஆரம்ப நிகழ்வுகளில் பேராசிரியர் பரமு புஷ்பரட்ஷணம் ,யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி, தொல்லியல்துறை முன்னாள் பணிப்பாளர் நிமால் பெரேரா, பிரதேச தொல்லியல் காரியாலய உதவிப் பணிப்பாளர் யு.ஏ.பந்துலஜீவ, கலாசார மத்திய நிதிய திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் .

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக நேற்று இயற்கை விஞ்ஞானம்சார் தொல்லியல் , கற்காலம் குறித்த விரிவுரைகளும் இடம்பெற்றன. (அ)

# கேகாலையில் துப்பாக்கி பிரயோகம் ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 15

கேகாலை - கலபிட்டமட - துனமால பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

துனமால பகுதியில் கெப்ரக வாகனமொன்றில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவரே சுட்டுக்கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் துனமால இறப்பர் தோட்ட காவலாளியாக பணியாற்றி வருபவர் என பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கலபிட்டமட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ரூ.25 இலட்சம் பெறுமதியான நகை, பணம் உடப்பு அம்மன் கோயிலில் நேற்று திருட்டு!

கொழும்பு, ஜூலை 15

உடப்பு வீரபத்திரகாளி அம்மன் கோயிலில் நேற்றுக் காலை நுழைந்த திருடன் 25 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தங்க நகைகள் மற்றும் பெருந்தொகைப் பணத்துடன் தப்பிச் சென்றுள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தர்களினால் காளியின் கழுத்தில் அணிந்திருந்த 12 பவுணுக்கும் அதிகமான மதிப்புள்ள தங்க நகைகளும், தங்கத்தால் செய்யப்பட்ட காளியின் பிற அலங்காரப் பொருட்களும் திருடப்பட்டன என்று கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி உண்டியலை உடைத்து ஏராளமான பணத்தையும் திருடி செல்லப்பட்டுள்ளது. காளி கோயிலின் ஒருபுறம் உள்ள சிறிய வாயிலின் பூட்டை உடைத்து முகத்தை மறைத்துக்கொண்டு திருடன் கோவிலுக்குள் நுழையும் காட்சி சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு பொலிஸாருக்கு மேலதிகமாக பொலிஸ் கைரேகைப் பிரிவினரும் இந்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# "அமைச்சரவையால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்படவேண்டும்!"

கொழும்பு, ஜூலை 15

வைத்தியசாலை கட்டமைப்பில், தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு, அமைச்சரவையைக் கூட்டி, உடனடியாக அவசர நிலையை பிரகடனப்படுத்த வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் யோசனை முன்வைத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அந்த ஒன்றியத்தின் தலைவரான மருத்துவர் ருக்ஷான் பெல்லன இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

கெனியுலா எனப்படும் ஊசி மருந்துகளை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்றின் பாகம் விஷமானதால் ஏற்பட்ட தாக்கநிலையால், பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மரணித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

31 வயதான நபரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்தார்.

கடந்த சில தினங்களாக, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்குரிய நிலையால், நாட்டின் சில வைத்தியசாலைகளில், சில மரணங்கள் பதிவாகின.

குறித்த நபர், சில தினங்களுக்கு முன்னர், கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில், டெங்கு நோய்க்கு சிகிச்சைப் பெறுவதற்காக சேர்க்கப்பட்டார்.

இதன்போது, அவருக்கு சிகிச்சையளிப்பதற்காக, ஒரு கையில் கெனியுலா எனப்படும் ஊசி மருந்துகளை ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்றின் பாகம் ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த இடத்தில் அவருக்கு தொற்று ஏற்பட்டதுடன், அதன் பின்னர் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு நோயிலிருந்து குணமடைந்த குறித்த நபர், பின்னர் மாரடைப்புக்கு சிகிச்சைப் பெறுவதற்காக, பாணந்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு நோய் நிலைமை தீவிரமடைந்தமையால், பல தினங்களாக தீவிர சிகிச்சைகளை வழங்குவதில் சிரமம் ஏற்பட்ட நிலையில், அவர் உயிரிழந்தாரென குறிப்பிடப்படுகிறது.

இதேநேரம், களுபோவில போதனா வைத்தியசாலையில், கண் சத்திரசிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட 72 வயதான பெண் ஒருவர், சத்திரசிகிச்சைக்கு முன்னரான சிகிச்சைகளின்போது, சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தாரென உறவினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதற்கு முன்னர், பேராதனை போதனா வைத்தியசாலையில், வயிற்றுவலிக்கு சிகிச்சைப் பெறுவதற்காக சேர்க்கப்பட்ட 21 வயதான யுவதி ஒருவர், உயிரிழந்தார்.

வைத்தியசாலையில் வழங்கப்பட்ட தடுப்பூசி காரணமாகவே அவர் மரணித்ததாக குறித்த யுவதியின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேநேரம், தேசிய கண் வைத்தியசாலையில், வெண்படலத்தை நீக்குவதற்கான சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளருக்கு மருந்து வழங்கப்பட்டதை அடுத்து, அவருக்கு பார்வைக் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக எமது செய்திச் சேவைக்கு முன்னதாக தகவல் கிடைத்திருந்தது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு, சுகாதார அமைச்சால் பிரத்தியேகமான பிரிவு ஒன்று நிறுவப்பட வேண்டும் என வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான தொழிற்சங்க சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# நிலவில் கொடி ‘பறந்தது’ ஏன்?

# ஆம்ஸ்ட்ராங் தரையிறங்கும் காட்சி ஹொலிவுட்டில் படமாக்கப்பட்டதா?

அமெரிக்கா 1969-ம் ஆண்டு முதன்முதலில் அப்போலோ 11 எனும் விண்வெளி விமானத்தின் மூலம் நிலவில் மனிதர்களை தரையிறங்கியது.

அப்போதிருந்தே இது நிகழவே இல்லையென்றும், நிலவில் தரையிறங்குவது போன்ற காட்சிகள் போலியாகச் சித்தரிக்கப்பட்டவை என்றும் பலரும் சொல்லி வந்தனர்.

ஆனால் அது உண்மையா இல்லையா என்று எவ்வாறு அறிந்துகொள்வது?

அமெரிக்கா நிலவில் தரையிறங்கிய 1969-ம் ஆண்டு அதனைச் சித்தரிப்பதற்கான தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்படவில்லை, என்கிறார் அறிவியல் எழுத்தாளரான டலாஸ் கேம்ப்பெல். “ஆனால் நிலவுக்குச் செல்லும் தொழில்நுட்பம் நம்மிடம் இருந்தது,” என்கிறார்.


**நட்சத்திரங்கள் ஏன் தெரியவில்லை?**


அப்போலோ 11 நிலவில் தரையிறங்கியது போலி என்று சொல்பவர்கள், அதற்காக முதலில் சொல்லும் காரணம், “அக்காட்சிகளில், பின்னணியில் நட்சத்திரங்கள் தெரியவில்லை” என்பதுதான்.

இதற்குக் காரணம், ‘High Contrast’ எனப்படும் ஒளியில் இருக்கும் உச்சபட்ச மாறுபாடு என்கிறார் திரைப்படம் மற்றும் புகைப்பட தொழில்நுட்பங்களின் நிபுணரான மார்க் ஷுபின்.

“மிகவும் வெளிச்சமாக இருக்கும் பட்டப்பகலில், ஒரு வீட்டின் கதவைத்திறந்து உள்ளே பார்த்தால், அங்கு இருப்பவற்றை நம்மால் சரியாகப் பார்க்க முடியாது. இது ஏனெனில் நாம் நிற்கும் இடத்தில் வெளிச்சம் அதிகமாக இருப்பதனால்,” என்கிறார் ஷுபின்.

இதே விளைவினால்தான் நிலாவில் தரையிறங்கும் காட்சிகளிலும் நம்மால் நட்சத்திரங்களைப் பார்க்க முடியவில்லை என்கிறார் அவர்.





**இது ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டதா?**

நிலவில் தரையிறங்கியதை பொய் என்று சொல்பவர்கள், முக்கியமாக முன்வைக்கும் இன்னொரு விளக்கம், அக்காட்சிகள் ஹாலிவுட்டில் இருக்கும் ஒரு ஸ்டுடியோவில் ‘செட்’ அமைத்து படப்பிடிப்பு நடத்தப்பட்டு எடுக்கப்பட்டன என்பது.

ஆனால், நிபுணர்கள் இக்கருத்தில் மாறுபடுகிறார்கள். நிலவில் இருக்கும் குறைந்த புவியீர்ப்பினைப் போன்று ஒரு படப்பிடிப்பு ஸ்டுடியோவுக்குள் உருவாக்குவது சாத்தியமற்ற ஒன்று என்கிறார்கள்.

“காற்று இருக்குமிடத்தில் தூசியும் மண்ணும் ஒரு வகையில் நடந்துகொள்ளும். அதுவே நிலவைப்போல சுத்தமாக காற்றே இல்லாத இடத்தில் அவை முற்றிலும் வேறு மாதிரி நடந்துகொள்ளும். அதனால், அக்காட்சிகளை ஒரு ஸ்டுடியோவில் ‘செட்’ அமைத்து காட்சிப்படுத்தியிருக்க வேண்டுமென்றால், அங்கு இருக்கும் காற்றை முழுதுமாக வெளியேற்றி, அங்கு ஒரு வெற்றிடத்தை உருவாக்க வேண்டும்,” என்கிறார் ஷுபின்.

**சோவியத் ஒன்றியம் என்ன செய்துகொண்டிருந்தது?**

அமெரிக்கா நிலவில் தரையிறங்கிய 1969-ம் ஆண்டு அமெரிக்க-சோவியத் பனிப்போர் உச்சத்திலிருந்த காலகட்டம்.

அக்கால கட்டத்திலேயே சோவியத் யூனியனிடம் மேம்பட்ட கண்காணிப்புத் தொழில்நுட்பம் இருந்தது என்கிறார் லண்டன் பல்கலைகழகத்தில், சர்வதேச ராஜீய உறவுகள் துறையின் மூத்த பேராசிரியர் அந்த்வான் பூஸ்கே.

“அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சோவியத் யூனியனால் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளையும், செயற்கைக் கோள்களையும் கண்காணித்திருக்க முடியும். எனவே, அமெரிக்கா நிலவில் தரையிறங்கியது போலியானதாக இருந்தால், சோவியத் யூனியனால் அதனை கண்டறிந்திருக்க முடியும். மேலும், அவர்கள் அப்படியொரு விஷயத்தைக் கண்டறிந்தால், அதனை வெளிப்படுத்தி அமெரிக்காவுக்கு எதிரான ஒரு பிரசாரத்தைச் செய்திருப்பார்கள்,” என்கிறார் பூஸ்கே.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை என்கிறார் பூஸ்கே.

**நிலவிலிருந்து என்ன கொண்டு வரப்பட்டது?**

நிலவில் இருந்து கற்கள் கொண்டுவரப்பட்டன. இவை முக்கியமான சான்றுகள் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இந்தக் கற்கள் இன்றளவும் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன என்கிறார், இங்கிலாந்து விண்வெளி அமைப்பின் இயற்பியலாளரான லிப்பி ஜாக்சன்.

“அவற்றில் சில கற்கள் இன்றளவும் சீல் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. யாரும் அவற்றைத் தொட்டது கூட இல்லை,” என்கிறார்.

1960கள், 1970களிலேயே எதிர்காலத்தில் தொழில்நுட்பம் மேம்படும் என்றும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழும் என்றும் விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர், என்கிறார் ஜாக்சன்.

**நிலவில் மனிதர்கள் விட்டு வந்த அடையாளம்**

நிலவில் தரையிறங்கிய விண்வெளி வீரர்கள் அங்கு சில ரிஃப்ளெக்டர்களைப் பொருத்தியிருக்கின்றனர்.

பூமியில் இருந்து லேசர் ஒளிக்கற்றைகளை நிலவின் மீது பாய்ச்சினால், அந்த ரிஃப்ளெக்டரிகளில் பட்டுப் பிரதிபலிக்கும், என்கின்றனர் விஞ்ஞானிகள்.

இதன் மூலம்தான் நிலவின் சுழற்சியில் நிகழும் மாற்றங்கள் ஆராயப்படுவதாகச் சொல்கிறார்.

**கொடி எப்படி அசைந்தது? கால் தடம் எப்படிப் பதிந்தது?**

இவற்றுக்குமேல், காற்றில்லாத நிலவில், கொடி எப்படி அசைந்தது, நீரில்லாத போது கால்தடம் எப்படிப் பதிந்தது போன்ற கேள்விகளும் அடிக்கடி எழுப்பப்படுகின்றன.



இவற்றுக்கான விடையை அறிந்துகொள்ள விஞ்ஞான் பிரசார் அமைப்பின் முதுநிலை விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரனுடன் பேசியபோது,



அதற்கு அவர், இவற்றுக்கு எளிய அறிவியல் விளக்கங்கள் உள்ளன என்று கூறினார்.

கொடி அசைந்ததை, நைசவயை எனும் விளைவின் மூலம் விளக்கலாம் என்றார்.

“அதாவது, ஓடும் பேருந்தில் திடீரென ப்ரேக் செலுத்தப்பட்டால், நின்றுகொண்டிருப்பவர்கள் முன்னால் தள்ளப்படுவார்கள் அல்லவா, அதேபோல்தான் உராய்வு இல்லாத இடத்தில் சுருட்டிவைத்திருந்த கொடியைப் பிரித்த போது அந்த உந்துவிசையால் கொடி படபடத்தது,” என்றார்.

அதேபோல் நிலவில் பதிந்த கால்தடம் பற்றிச் சொல்லும்போது, பூமிக்கு இருப்பதுபோல் வளிமண்டலம் இல்லாததால், நிலவில் விண்கற்கள் மோதியவண்ணம் இருக்கும் என்றார்.

“இப்படி மோதிக்கொண்டே இருப்பதால், அவை பொடியாகி, நிலவின் பரப்பு முழுவதும் ஒரு அடிக்கு குவிந்திருக்கிறது. இது சநபழடவைா எனப்படுகிறது. இதில் கால் வைத்ததால்தான் கால்தடம் பதிந்தது,” என்றார்.

மேலும், 1969-ம் ஆண்டு அமெரிக்கா முதன்முதலில் நிலவில் மனிதர்களை தரையிறக்கியபோது குறிப்பிட்ட ஒரு சிறிய குழு மட்டுமே அதனைச் சந்தேகித்தது, அதனால் அமெரிக்கா அதைப்பற்றிப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை என்றார். “மேலும் இதுபோன்ற எளிய அறிவியல் விளக்கங்களின் மூலம் அவற்றை எதிர்கொண்டனர்,” என்றார்.

சிவகுருநாதன் கேசவன் (பழைய மாணவன்)
விரிவுரையாளர்,
சியன தேசிய கல்விக் கல்லூரி

# யாழ்ப்பாணக் கல்லூரி

## கல்விப்புலத்தில் 200 ஆண்டுகால தனித்துவ பயணம்





இலங்கையின் கல்வி வளர்ச்சிக்குக் குறிப்பாக தமிழ்க் கல்விப் புலத்திற்கு அளப்பெரும் பணியாற்றிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தனது வெற்றிகரமான கல்விப் பயணத்தின் இருநூறாவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு கொண்டாடுகிறது. இலங்கையினது நவீன கல்வியின் பிதாமகர்களாகக் கருதப்படக்கூடிய மிஷனரிமார்கள் இலங்கைக்கு வந்ததன் நோக்கம் எதுவாக இருந்தாலும் எமது தேசத்திற்கு அவர்களாற்றிய கல்வி, மருத்துவப் பணிகளால் காலமெலாம் நினைவுகூரப்பட வேண்டியவர்களாகத் திகழ்கின்றார்கள். அவ்வகையில் அமெரிக்க மிஷனரிமார் இலங்கைக்குக் குறிப்பாக யாழ்ப்பாணத்திற்களித்த ஒப்பற்ற பரிசுகளுள் ஒன்று யாழ்ப்பாணக்கல்லூரியாகும். யாழ்ப்பாணக் கல்லூரி(துயகககயெ ஊழடடநபந) இலங்கையின் வட மாகாணத்தின் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள இருபாலாருக்குமான ஒரு தனியார் பாடசாலையாகும். அமெரிக்க மிஷனரிமாரால் 1823ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அத்திபாரமாக அமைந்த ‘பற்றிக்கோட்டா செமினரி’ என்ற உயர் கல்வி நிலையம் நிறுவப்பட்டது. வண. டானியல் பூவர் அவர்கள் இச்செமினரியின் நிறுவுனராகவும் முதல் அதிபராகவும் விளங்கினார். பல்வேறு காரணங்களினால் செமினரியை 1855இல் மூடவேண்டியேற்பட்டது. செமினரியை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான கோரிக்கைகள் எழுந்தமையைத் தொடர்ந்து, 1872ஆம் ஆண்டு யூலை 3ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. வண.ஈ.பி.ஹேஸ்ரிங்ஸ் அவர்கள் கல்லூரியின் முதல் அதிபராக விளங்கினார். கல்லூரிக்கு ஆதாரமாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை (Board of Trustees -1835)> பணிப்பாளர் சபை(1876) என்பன உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரி தனக்கெனப் பல தனித்துவங்களையும் பாரம்பரியங்களையும் கொண்ட கல்லூரியாக வெற்றிகரமாகத் தனது பயணத்தை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் விடுதிப் பாடசாலையாக இயங்கினாலும் 1909 முதல் நாளாந்தம் வருகைதரும் மாணவர்களையும் இணைத்துக்கொண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பெருமை தந்தவற்றுள் ஒன்று அதன் பட்டதாரிப் பிரிவாகும். ஆரம்பத்திலேயே வண. டானியல் பூவர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியை அமைக்கவேண்டும் எனப் பெரிதும் விரும்பி, அதற்காக முயற்றார் எனினும் அது முழுமையாகச் சாத்தியமாகவில்லை. அந்நோக்கத்தை நிறைவு செய்வதாக, பட்டக் கல்வியை வழங்கும் நோக்குடன் 1947இல் ஆரம்பிக்கப்பட்ட பட்டதாரிப்பிரிவு படிப்படியாக வளர்ந்து 1970களின் ஆரம்பத்தில் விஞ்ஞான, கலை, வர்த்தகத் துறைகளில் பயின்ற சுமார் 450 மாணவர்களுடன் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருந்தது. 1972இல் யாழ்ப்பாணக் கல்லூரி தொழினுட்ப நிறுவனம் நிறுவப்பட்டமையைத் தொடர்ந்து விரிவான மூன்றாம்நிலைக் கல்வியையும் வழங்கும் நிறுவனமாக யாழ்ப்பாணக் கல்லூரி திகழ்ந்தது. துரதிஷ்டவசமாக 1974இல் அரசாங்கம் கல்லூரியைச் சுவீகரித்தமையினால் பட்டதாரிப்பிரிவு செயலிழக்கவேண்டியதாயிற்று. பின்னர் பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப்பட்டங்களுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்தோடு 1993இல் வட்டுக்கோட்டையிலும் யாழ். நகரின் மத்தியிலும் பட்டதாரிப் பிரிவு மீளச் செயற்படத் தொடங்கியது. யாழ் நகரில் இன்றும் செயற்பட்டு வருகின்றது.



வண. டானியல் பூவர்
பற்றிக்கோட்டா செமினரியின்
ஸ்தாபகரும்
முதல் அதிபரும்



வண. ஈ.பி. ஹேஸ்ரிங்ஸ்
யாழ்ப்பாணக் கல்லூரியின்
முதல் அதிபர்

யாழ்ப்பாணக் கல்லூரி என்றதுமே எம் நினைவுக்கு வரும் அடையாளங்கள் பலவுள்ளன. அவற்றுள் முதன்மையானது கல்லூரியின் நூல்நிலையமாகும். தெற்காசியாவின் தலைசிறந்த கல்லூரி நூலகமாக ஒருகாலத்தில் விளங்கிய இந்நூல்நிலையம் இன்றும் இலங்கையின் பெரிய பாடசாலை நூலகமாக விளங்குகிறது. ஆரம்பத்தில் பற்றிக்கோட்டா செமினரியில் இருந்த சிறிய நூலகம் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு 1876இல் கல்லூரியில் நூலகம் ஸ்தாபிக்கப்பட்டது. 1970களில் இந்த நூலகம் 25000இற்கும் அதிகமான அரிய நூல்களுடனும் தொன்மையான ஆவணங்களை உள்ளடக்கிய ஆவணக்காப்பகத்துடனும் விளங்கியதாகும். 1974ஆம் ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்காக அரசினால் கல்லூரியின் ஒருபகுதியுடன் நூலகமும் கையகப்படுத்தப்பட்டது. ஆதனால் பல இழப்புகள் நூலகத்திற்கு ஏற்பட்டன. இன்று கல்லூரியின் வாயிலில் தலைநிமிர்ந்து நிற்கும் ‘டானியல் பூவர் நூல்நிலையக் கட்டடம் 1980இல் திறந்துவைக்கப்பட்டதாகும்.

கல்லூரியன் ஒட்லி மண்டபம் மற்றோர் அடையாளமாகும். 1826ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மண்டபமே பின்னர் சேர் றிச்சேர்ட் ஒட்லி அவர்களின் பெயர் சூட்டப்பட்டு ஒட்லி மண்டபமாயிற்று. பங்கர் விடுதி, ஹெளலண்ட் விடுதி என்பன கல்லூரியின் அங்கங்களாகும். இவை தவிர இடைநிலை மாணவர்களுக்காக சான்டர்ஸ், செல்லையா விடுதிகளும் கல்லூரியில் இயங்கின. கல்லூரியின் பிறவுண் மைதானம், பிக்னல் மைதானம் என்பன நினைவைவிட்டகலாதவை. பிக்னல் மைதானத்தில் பாரிய பார்வையாளர் அரங்கு நிர்மாணிக்கப்பட்டு 1960இல் பிக்னல் ஞாபகார்த்த அரங்கமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதுவே யாழ்ப்பாணப் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய பார்வையாளர் அரங்கமாகும்.

பாடசாலைகள் போதனை நிலையங்களாக மட்டும் செயற்படுவதில் பயனில்லை. மாணவர்களின் பல்துறையாற்றல்களையும் திறன்களையும் வளர்த்து ஆளுமைமிக்க முழு மனிதர்களாக்குவதே திறமைமிகு பாடசாலைகளின் பணியாகும். அவ்வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி தன் பங்களிப்பைச் சிறப்பாக வழங்கிவந்துள்ளது. கல்லூரியின் மலர் 1879இல் வெளிவரத் தொடங்கியது. இது ஆங்கில, தமிழ் மொழிகளில் வருடாந்தம் வெளிவரும் கல்லூரியின் உத்தியோகபூர்வ மலராகும். மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய இளஞாயிறு / Young Idea என்ற சஞ்சிகையின் முதல் இதழ் 1936ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவை தவிர கல்லுரித் தமிழ் மன்றத்தினர் தமிழருவி என்ற சஞ்சிகையையும் விடுதிமாணவர்கள் விடுதிச் சுடர் என்ற சஞ்சிகையையும் கையெழுத்துப் பிரதியாக வெளியிட்டு வந்தனர். இவை மாணவர்களின் படைப்பாற்றலை விருத்திசெய்ய பெரிதும் உதவின. கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பவற்றுள் விளையாட்டுத் துறை முக்கியமானதாகும். மாணவர்களை கலை, இலக்கிய, சமயவிழுமிய, சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி முழுமையானவர் களாக உருவாக்குவதில் கல்லூரியின் மன்றங்களின் பங்கு அளப்பரியதாகும். ஆசியாவின் முதலாவது மாணவர் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் யாழ்ப்பாணக் கல்லூரியில் (1884) நிறுவப்பட்டது. சாரணர் இயக்கம், சாரணீயர் இயக்கம், லியோ கழகம், கிறிஸ்தவ மாணவர் மன்றம் முதலான அமைப்புகளும் செயற்பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றம் முக்கியத்துவமுள்ள ஒரு அமைப்பாகும். தமிழ் மன்றம் வருடாந்தம் பாரதி விழாவினைச் சிறப்பாக நடாத்திவருகிறது. கல்லூரியின் ஆரம்பப் பிரிவினால் வருடாந்தம் காந்தி விழா நடாத்தப்படுகிறது. இவ்விரு விழாக்களும் கல்லூரியின் அடையாளங்களாக மாறிவிட்டன என்றால் மிகையல்ல.

பாடசாலைகளின் பெறுமதியை உணர்த்துகிறவர்களாகவும் புகழைக் காலந்தோறும் நிலைபெறச் செய்பவர்களாகவும் விளங்குபவர்கள் பாடசாலைகளின் பிரசவங்களாக அமையும் மாணவர்களே. யாழ்ப்பாணக் கல்லூரித் தாய் தன் பிள்ளைகளால் வளம் பெற்றவள்ளூ பெருமைகொண்டவள். இன்று உலகெங்கும் பரந்து வாழும் கல்லூரியின் பழைய மாணவர்கள் வாழ்வில் உயர்ந்து, தமக்கும் சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாகக் கல்லூரிக்குப் புகழ்சேர்க்கிறார்கள். கல்வித்துறையிலும் சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் நிர்வாகத்துறையிலும் கணக்கியல், பொறியியல், தொழினுட்பம், வர்த்தகம் எனப் பல்வேறு துறைகளிலும் பழைய மாணவர்கள் பலர் பிரகாசித்துவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தினை நிறுவும் நோக்கில் 1974இல் யாழ்ப்பாணக் கல்லூரியும் சுவீகரிக்கப்பட்டமையினால் பெருமளவு நிதியிழப்பையும் பல பின்னடைவுகளையும் எதிர்நோக்கவேண்டியேற்பட்டது. எவ்வாறாயினும் கல்லூரிச் சமூகத்தினரின் உறுதியான செயற்பாடுகளினால் மீட்கப்பட்ட கல்லூரி அந்த இருண்ட காலத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மீளெழுச்சிகண்டது. இரண்டாயிரங்களின் முதலிரு தசாப்தங்களும் கல்லூரிக்கு சவால்மிகுந்த காலங்களாக அமைந்தமை துரதிஷ்டவசமானதாகும். அதற்கான காரணங்களை இங்கு விபரித்தல் பொருத்தமற்றதும் சாத்தியமற்றதுமாகும். எவ்வாறாயினும் இன்று கல்லூரி நிர்வாகத்தினரின் முனைப்பான செயற்பாடுகளாலும் கல்லூரியின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையினரின் பங்களிப்பினாலும் பழைய மாணவர்களின் ஒத்துழைப்பினாலும் கல்லூரி மீண்டெழத்தொடங்கியுள்ளது. விரைவில் கல்லூரி மீளொளி வீசும் என நம்புவோம். பற்றிக்கோட்டா செமினறியாகக் கருக்கொண்டு, யாழ்ப்பாணக் கல்லூரியாக மலர்ந்து மாணவர்கள் பலரை உருவாக்கி யாழ்ப்பாணத்தையும் தமிழரையும் கல்வியால் தலைநிமிர வைப்பதில் அளப்பெரிய பங்காற்றிய கல்வி நிறுவனம் தனது பயணத்தின் இருநூறாவது ஆண்டைப் பூர்த்திசெய்கிறது என்பது சாதாரண விடயமல்ல. அமெரிக்க மிஷனரிகள் எமக்களித்த இப்பொக்கிஷத்திற்காக நாம் காலமெலாம் கடன்பட்டுள்ளோம். யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெருவிருட்சத்தை பேணிப் பாதுகாத்து, விருத்திசெய்து அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் பயன்படுமாறு வளப்படுத்துவது பயன்கொண்ட அனைவரதும் கடனாகும். ●

# திருக்கோவில் ஆடி அமாவாசை உற்சவம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

*காரைதீவு, ஜூலை 15*

*வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி சிறப்பாக நடைபெற வுள்ளது.*

*ஆலய பிரதமகுரு சிவசிறீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.*

*இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஆடிஅமாவாசை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.*

*இற்றைக்கு 2000 ஆண்டுக ளுக்கு முன்பு வாழ்ந்த மக்க ளால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இரா ஜராஜ சோழன் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு கால பூஜைகள் செய்யப் பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.*

*தினமும் பகலில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டவிருக்கிறது.*

*(அ)*

# 100 ரூபாய் மேலதிகமாகப் பெற்றமைக்காக ஒரு லட்ச ரூபாய் தண்டம் செலுத்த உத்தரவு!

*காரைதீவு, ஜூலை 15*

டெங்கு இரத்தப் பரிசோதனைக்காக பெறப்படும் ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கு பதிலாக 1300 ரூபாய் பெற்றதற்காக அந்த உரிமையாளருக்கு ஒரு லட்ச ரூபாய் தண்ட பணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அக்கரைப்பற்றில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள இரத்த ஆய்வு கூடம் ஒன்றில் இரத்த பரிசோதனைக்காக 100 ரூபாய் மேலதிகமாக பெற்றமைக்காக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை எதிரிக்கு ஒரு லட்ச ரூபாய் தண்டப்பணம் விதித்தது .

அரசினால் நிர்ணயம் செய்த இரத்த மாதிரி பெறுவதற்காக ஆயிரத்து 200 ரூபாய் வழங்கப் படுவது வழக்கம் .

அந்த வகையிலே அக்கரைப் பற்றை சேர்ந்த ஒருவர் அந்த இரத்த ஆய்வு கூடத்தில் இரத்த பரிசோதனை செய்திருக்கின்றார். அதற்கு பெற வேண்டியது 1200 ரூபாய் ஆனால் 1300 அவர் பெற்றிருந்தார்.

அவர் நேரடியாக நுகர்வோர் அதிகார சபையிடம் முறைப் பாடு செய்ததன் பேரில் அதிகார சபையினர் அக்கரைப் பற்று நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கை நேற்று முன் தினம் வியாழக்கிழமை தாக்கல் செய்து இருந்தனர்.

இந்த வழக்கை ஏற்றுக் கொண்ட அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எச்.எம்.ஹம்சா விசாரித்த பொழுது குறித்த ஆய்வு கூட உரிமையாளர் தான் 1300 பெற்றதை ஒத்துக் கொண்டார்.

அதனையடுத்து எதிரிக்கு ஒரு லட்ச ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (அ)

# திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த கோரிக்கை

*திருமலை, ஜூலை 15*

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். கந்தளாய் பகுதியில் திருடர்கள் இரவு வேளையில் தமது கைவரியை காட்டி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் திருட வந்த இரண்டு திருடர்கள் சிசிரிவி கமெராவை கண்டதும் தலைதெறிக்க ஓடி உள்ளார்கள்.

போதைக்கு அடிமையான வர்கள் தான் இச் செயலில் ஈடு பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கந்தளாய் பகுதியின் பேராறு, ரஜஎல, மத்ரஸா நகர் மற்றும் மூன்றாம் கொலனி போன்ற கிராமங்ககளில் இரண்டு மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தனித்துக் குடியிருக்கும் வீடுகளிலும், ஆட்கள் குடியிருக்கும் வீடுகளிலும் துணிந்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது சாதாரணமாகிவிட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருட்டுச் சம்பவங்கள் விடயத்தில் கந்தளாய் பொலிஸார் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும கோரப்பட்டுள்ளது.

# சரத் வீரசேகர, ஹாபீஸ் நசீர் போன்றோர் இருக்கும்வரை சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படப்போவதில்லை!

## காரைதீவு முன்னாள் தவிசாளர்

*காரைதீவு, ஜூலை 15*

"இனவாதிகளான சரத் வீரசேகர மற்றும் ஹாபீஸ் நசீர் அகமத் போன்றோர் இந்த மண்ணில் இருக்கும் வரை இலங்கையில் ஒருபோதும் நிரந்தர சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட்டு விடப் போவதில்லை."

-இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கே.ஜெயசிறில் நேற்று தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் இன நல்லுறவுக்கு குந்தகமாக அமைச்சர் சரத் வீரசேகர முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமத் ஆகியோர் முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டு இருந்தார்கள் .அது மிகவும் குந்தகமாக இருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட் தான்தோன்றித்தனமாக கருத்துக்களை வெளியிட்டு மலையகத் தமிழர்கள் கிழக்குத் கிழக்கு கிழக்கான் மலையகத்தான் என்கின்ற வேறுபாடான பிரிவினைவாத கருத்துக்களையும் இனவாத கருத்துக்களையும் கூறி கௌரவமாக மக்களுக்காக பணியாற்றி வருகின்ற ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு சேறு பூசுகிறார். உண்மையில் ஆளுநர் செந்தில் தொண்டமான் இனமத குல வேறுபாடு இன்றி மூவின மக்களுக்கு, மந்தகதியாக இருந்த நிர்வாக செயல்பாடுகளை துரிதப் படுத்தும் செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்.

அதன் அடிப்படையில் உண்மையிலேயே சீரரழிக்கும் வகையிலும் பணிகளை மழுங்கடிக்கும் வகையிலும் கண்டனம் ஒன்றை வெளியிட்டு இருக்கின்றார் அவர்.

பணம் கொடுத்து பல அதிகாரங்களை பெற்று பல தமிழர்களுடைய இருப்புகளை இல்லாது ஒழிப்பதற்கு இனவாத செயல்பாட்டை தீட்டுகின்றார் இது தொடர்பாக பல அமைப்புக்கள் இதற்குரிய கண்டனங்களையும் தெரிவிக்கவேண்டும் என்றார்.






# சாணக்கியன் எம்.பியை இன்னும் நம்புபவர்கள் சிந்திக்கவேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 15

**சாணக்கியனை அரசிலுக்குள் இழுத்துவந்தவர்கள் மற்றும் அவரை தமிழ்த் தேசியவாதியென்று நம்புபவர்கள் எதிர்காலத்தில் சிந்தித்து முடிவுகளை எடுக்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கற்சேனை பகுதியில் கடந்த 16 வருடங்களுக்கு மேல் உடைந்து புனரமைக்கப்படாத நிலையிலிருந்த கற்சேனை விநாயகர் அணைக்கட்டின் மீள்நிர்மாணப் பணிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

காலநிலை மாற்றத்தினை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் இந்த அணைக் கட்டு மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் தெரிவிக்கையில்-

அண்மையில் விவசாய இராஜாங்க அமைச்சர் மட்டக்களப்பு வருகைதந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய அமைப்புகளின் வேண்டுகோள், பொறியியலாளர்களின் கணிப்பீடுகளின் அடிப்படையில் 530 மில்லியன் ரூபாவில் 22 வேலைத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அதில் இந்த விநாயகர் அணைக்கட்டு பெரிய வேலைத் திட்டமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன் கீழ் இந்த வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முடிந்தளவான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தொடங்கியுள்ளோம். சுமார் நான்கு பில்லியன் அளவிலான வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சுமார் 15 பில்லியன் அளவிலான வேலைகளை செய்வதற்கு முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எங்களை தொடர்ந்து இழிவுபடுத்தும் செயற்பாடுகளையே முன்னெடுத்துவருகின்றனர். அதிலும் சாணக்கியன் தான் அதிகளவான விமர்சனங்களை முன்னெடுத்து வருகின்றார். அவர் அரசாங்கத்துடன் இணைந்து அரசியலுக்கு வந்தவர். அவரின் தேர்தல் விஞ்ஞாபனம் 2030 என குறிப்பிட்டதில் உள்ளவற்றை அவரிடம் எங்குள்ளது என கேட்கவேண்டும்.

கவலையான விடயம் என்னவென்றால் அவருடைய தாய் இனத்தவருடன் இணைந்து எங்களது வீடுகளையும் அவர் எரிக்க வந்தார். கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள சகோதர இன மாணவர்களுடன் இணைந்து எங்களது காரியாலயத்தினையும் எரிக்கமுனைந்தார்.

அரசாங்கம் மாறவேண்டும், நாட்டில் மாற்றம்வேண்டும் என்று போராடியபோது சாணக்கியன் மாத்திரம் அவரது அரசியல் எதிரிகளான வியாழேந்திரன், பிள்ளையான் வீடுகளை எரிக்கவேண்டும் என்றும் ஆக்களை கொண்டுவந்து கல்லெறிந்தார். இதுதானா ஜனநாயகம் என்பதை அவர்கள் கேட்டுப் பார்க்கவேண்டும்.

சாணக்கியனும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் இருந்திருக்காவிட்டால் எமது வீட்டுக்கு கல் வந்திருக்காது. இவரை அரசியலுக்கு இழுத்து வந்தவர்கள், இவரை தமிழ்தேசியவாதியென்று நம்புபவர்கள் சிந்தித்து எதிர்காலத்தில்முடிவுகளை எடுக்கவேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்- என்றார்.

(அ)



# இராணுவத்தினரால் கடற்கரை சிரமதானம்

அம்பாறை, ஜூலை 15

இராணுவத்தினரால் கல்முனை மாநகர சபை எல்லைக் குட்பட்ட கடற்கரை பகுதிகளை சுத்தப்படுத்தல் விசேட வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட் படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறியின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் இராணுவ முகாம் சூழல் அமைந்துள்ள கடற்கரை மற்றும் அண்டிய பல பகுதிகள் சிரமதானப் பணியினை இராணுவத்தினர் முன்னெடுத்தனர்.

இதன்போது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் கடற்கரை வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள் குப்பை கூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப் பிடத்தக்கது.

மேற்படி நடவடிக்கையின் போது கல்முனை மாநகரை தூய்மைப் படுத்தும் மாநகர ஆணையாளர் ஏ. எல். எம். அஸ்மியின் அறிவுறுத்தலுக்கமைய கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் யு. எம். இஸ்ஹாக் தலைமையில் மேற்பார்வை உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலில் இந்த சிரமதானப்பணிக்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(அ)

# ஆடி அமாவாசை ஒகஸ்ட் 16ஆம் திகதியே!

காரைதீவு, ஜூலை 15

ஆடி மாதத்தில் இரண்டு தினங்களை உள்ளடக்கி அமாவாசை வருவதால் சாஸ்திர சம்பிரதாயங்களின்படி பிந்திய 16 ஆம் திகதியே பிதிர்க்கடன் செலுத்தி தீர்த்தமாடுவதற்குரிய பொருத்தமான தினமாகும் என்று சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி மற்றும் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் கூறுகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு ஜூலை 17ஆம் திகதி சூரியன் மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு மாறுகிறார். அன்றைய தினமே ஆடி மாதம் பிறக்கிறது. அன்றைய தினம் அமாவாசையும் சேர்ந்து வருகிறது. மாதப்பிறப்பு, தக்ஷிணாயனம், அமாவாசை என்று மூன்று புண்ணிய காலங்கள் இணைந்த ஆடிப் பண்டிகையை இந்தாண்டு கண்டு களிக்க உள்ளோம்.

மேலும், ஆடி மாதம் 31ஆம் திகதி (ஒகஸ்ட் 16ஆம் திகதி) மீண்டும் அமாவாசை வருகிறது. இப்படி ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை தினங்கள் வருகிற போது, ஆடி அமாவாசை எனும் சிறப்பு எதற்கு உண்டு ? எல்லோருக்கும் ஏற்படும் ஐயம் தானே? அது ஏன்? நாம் நம் முன்னோர்களை வணங்கி வழிபடுவதால் நமக்கு அத்தகைய கேள்வி எழுகிறது.

ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசையோ, பவுர்ணமியோ, வந்தால் முதலில் வருவதை விட்டு விட்டு, பின்னதையே சிறப்புடையதாக ஏற்க வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

பூர்வம் த்யக்த்வா பரம் க்ராஹ்ய என்பது வாக்கியம்.

இதன்படி, பூர்வம் என்கிற முதலாவதை (த்யக்த்வா) விட்டு விட்டு பரம் ன்கிற பின்னால் வருவதை (க்ராஹ்ய) எடுத்துக் கொள்ள வேண்டும், என்பது தான் அதன் பொருள்.

எனவே, ஆடி முதல் திகதியில் வரும் அமாவாசையை சாதாரணமாக தர்ப்பணம் செய்யும் நாளாகவும், ஆடி 31ஆம் திகதி வரும் அமாவாசையை சிறப்புடைய ஆடி அமாவாசையாகக் கொண்டு, கடல் ஆறு, குளக்கரைகளில் தர்ப்பணம், தானம் முதலியன செய்து முன்னோரின் ஆசியைப் பெற வேண்டும்-என்றனர்.

(அ)

# இலங்கையின் எந்த மூலைமுடுக்கிலும் யாரும் தமிழ்மொழியை உதாசீனம் செய்ய முடியாது!

## மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் அசீஸ் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 15

இலங்கை அரசியல் யாப்பில் மொழி உரிமை பற்றி நான்காம் அத்தியாயத்தில் விரிவாக கூறப்பட்டிருக்கிறது. அதன்படி இலங்கையின் எந்த மூலைமுடுக்கிலும் தமிழ் மொழியை யாரும் உதாசீனம் செய்ய முடியாது.

இவ்வாறு கல்முனையில் இடம் பெற்ற சமூக உரிமைப் பாடு இரண்டாம் மொழி கல்வியின் முக்கியத்துவம் மொழிக் கொள்கை பற்றிய இறுதி நிகழ்வில் உரையாற்றிய இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.எம்.அசீஸ் தெரிவித்தார்

மனித அபிவிருத்தித் தாபனம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக கனடா அரசின் அனுமதியுடன் ஐந்து வருட வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயத்திட்டத்தின் ஒரு அங்கமாக சகவாழ்வு சங்கங்கள் ஊடாக ஒன்றிணைந்த கலாச்சார நிகழ்வையும் கருத்துக்களத்தையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கல்முனையில் ஏற்பாடு செய்திருந்தது.

கல்முனை கிரிஸ்டா இல்லத்தில் தாபன உதவி இணைப்பாளர் எம்.ஐ.றியால் தலைமையில் இந்த இறுதி அமர்வு இடம் பெற்றது.

அங்கு சிறப்பு பேச்சாளர்களாக மனித அபிவிருத்தி தாபனத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா சிங்கள




மொழி ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீஸ்கந்த ராஜா ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக மனித அபிவிருத்தி தாபனத்தின் ஸ்தாபகர் களின் அச்சாணியாக திகழ்ந்து புதன்று இறையடி சேர்ந்த அமரர் பொன்னையாவுக்கு இரண்டு நிமிடம் ஆத்மசாந்தி பிரார்த்தனை இடம்பெற்றது.

அங்கு மேலும் இணைப்பாளர் அசிஸ் பேசுகையில்.

வடக்கு கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழிலேயே முறைப்பாடு செய்ய உரிமை உண்டு.

ஏனென்றால் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூன்றாவது அத்தியாயத்தின் 14வது உறுப்பின் படி அது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல வடக்கு கிழக்கில் நிர்வாகமொழி கல்வி மொழி தமிழ்மொழி என்பதையும் நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் .

எனவே இலங்கை யாப்பின் நான்காவது உறுப்பில் மொழி உரிமை கூறப்படுகிறது. அந்த உரிமை முழுமையாக பேணப்பட்டால் நாட்டில் சமத்துவம் சமாதானம் நல்லிணக்கம் தானாக உருவாகும்.

தனிமனித சுதந்திரம் பேணப்படுகின்ற பொழுது மொழி உரிமை தானாகவே பேணப்படும்.

மொழி உரிமை மீறப்படுகின்ற பட்சத்தில் உரிய இடத்தில் முறைப்பாடு செய்து அதற்கான பரிகாரத்தை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் மொழியை கட்டாயம் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அது எமக்கு பல வழிகளிலும் உதவும். ஆனால் தாய் மொழியை என்றுமே நாங்கள் மறந்து விடக்கூடாது. அந்த தாய் மொழியிலேயே கருமமாற்ற இலங்கையில் சட்டம் இருக்கின்றது. உரிமை இருக்கின்றது என்பதை மறந்து விட க்கூடாது.

மனித அபிவிருத்தி தாபனம் இந்த மனித உரிமைகள் மொழி உரிமை விடயங்களிலே கூடுதலான பங்களிப்பை செய்து வருவது பாராட்டுக்குரியது- என்றார் .

(அ)

# ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

## பிரான்ஸில் வலியுறுத்தினார் பிரதமர் மோடி

பாரிஸ், ஜூலை 15

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் அளிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரான்ஸின் முன்னணி நாளிதழான 'லெஸ் இகோ'வுக்கு அவர் அளித்த சிறப்பு நேர்காணலில் தெரிவித்தவை வருமாறு,

சர்வதேச அரங்கில் மேற்கத்தேய நாடுகளுடன் ஒப்பிடும் போது, தெற்கு பிராந்திய நாடுகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. மிக நீண்ட காலமாக தெற்கு பகுதி நாடுகளின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. அந்த வகையில் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு, அதிக மக்கள் தொகை கொண்ட நாடு உள்ளிட்ட பல்வேறு தகுதிகளைப் பெற்றிருக்கும் இந்தியாவுக்கு, ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடமில்லை. அப்படியிருக்கும்போது உலகத்துக்காக பேசுகிறோம் என்று ஐ. நா. பாதுகாப்பு சபையில் எப்படி கூற முடியும்? பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் அளிக்கப்பட வேண்டியது அவசியம். இதற்காக ஐ. நா. சபையில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

அனைத்து கடல் பிராந்தியங்களிலும் பாதுகாப்பு, வளர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும். இதன்படி இந்திய, பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்ய இந்தியா கவனம் செலுத்தி வருகிறது. இந்த பிராந்தியத்தில் இந்தியாவும் பிரான்ஸூம் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. நாங்கள் எந்த நாட்டுக்கு எதிராகவும் செயல்படவில்லை. சர்வதேச சட்ட விதிகளைப் பின்பற்றி சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்யவே நடவடிக்கை எடுத்து வருகிறோம். உலக அமைதி, ஸ்திரத்தன்மைக்காக கடல் பிராந்திய பிரச்னைகளுக்கு பேச்சு மூலம் சுமுக தீர்வு காணப்பட வேண்டும்.



# உலகின் பழமை மொழி தமிழ்

பாரிஸ், ஜூலை 15

பிரான்ஸ் மக்களுக்கு தேசிய தின வாழ்த்து தெரிவித்து பேசிய பிரதமர் மோடி, உலகின் பழமையான மொழி தமிழ் என, அந்நாட்டு வாழ் இந்தியர்கள் மத்தியில் பேசினார்.

பிரான்ஸ் பாஸ்டில் தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் சென்றுள்ள பிரதமர் மோடி, பாரிஸில் அந்நாட்டு இந்தியர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: இங்கு நீங்கள் 'பாரத் மாதா கீ ஜே' என கோஷமிடுவதை கேட்கும் போது எனக்கு இந்தியாவில் கேட்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் பலமுறை பிரான்ஸ் நாட்டுக்கு வந்துள்ளேன். இம்முறை எனது வருகை சிறப்பானது.

நாளை தேசிய தினத்தை கொண்டாடும் பிரான்ஸ் மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னை அழைத்த பிரான்ஸ் மக்களுக்கு நன்றி.

உலகின் மிகப் பழமையான மொழியாக தமிழ் உள்ளது. உலகின் பழமையான மொழி இந்தியாவில் உள்ளது என்பதை விட வேறு என்ன பெருமை வேண்டும்.

'ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும், தன் மகனை சான்றோன் எனக்கேட்ட தாய்,' என்ற திருக்குறளுக்கு ஏற்ப, வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்தியாவின் முன்னேற்றத்துக்கு காரணமாக உள்ளனர்.

பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண் இந்தியாவின் ஜனாதிபதியாக உள்ளார். திருவள்ளுவருக்கு பிரான்ஸில் சிலை விரைவில் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# சந்திராயன் 3 விண்ணில் ஏவப்பட்டது

சிறீ ஹரிகோட்டாவிலிருந்து சந்திராயன் நேற்று விண்ணை நோக்கி சென்றுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய உருவாக்கப்பட்ட சந்திரயான்-3 விண்கலம் நேற்று பிற்பகல் விண்ணில் ஏவப்பட்டது. வரலாற்று சிறப்புமிக்க தருணத்தை, இந்தியர்கள் கொண்டாடினர். சிறீ ஹரிகோட்டாவில் இருந்து நேற்று பிற்பகல் 2.35 மணிக்கு சந்திரயான் 3 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

முன்னதாக, விண்கலத்தை சுமந்து செல்லும் 'எல்.வி.எம்.3 எம்-4' ஏவூர்தியில் விண்கலத்தின் அனைத்து பாகங்களும் முழுமையாக பொருத்தப்பட்டன. சந்திரயான் 3 விண்கலத்துக்கான அனைத்து பரிசோதனைகள் மற்றும் சோதனை ஓட்டங்கள் நிறைவடைந்த நிலையில், எரிபொருள் நிரப்பும் பணிகளும் இறுதிகட்டத்தை எட்டியது. இதனை தொடர்ந்து விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான கவுண்டவுன் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1. 05 மணிக்கு துல்லியமாக தொடங்கியது. இந்நிலையில் கவுண்டவுன் முடிவடைந்து சரியாக 2.35 மணிக்கு சந்திரயான் 3 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.





விலங்குகளின் நகைச்சுவைதனமான செயல்பாடுகளை வெளிப்படுத்தும் விதமான போட்டியில் பரிசு பெற்ற புகைப்படம் இது. இந்தப் படத்தை கெனிச்சி மோரினாகா என்பவர் படம்பிடித்தார்.

# வெற்றிகரமாக ஏவுகணையை பரிசோதித்தது வடகொரியா

பியாங்யொங், ஜூலை 15

வட கொரியா 'ஹ்வாசோங்-18' என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்தது குறித்து அந்நாட்டு ஜனாதிபதி பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்.



'ஹ்வாசோங்-18 சோதனை வெற்றிக்கரமாக முடிந்ததைக் கண்ட ஜனாதிபதி கிம் வெள்ளை உடையில் மகிழ்ச்சியாக கைதட்டினார். ஹ்வாசோங்-18 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி, கிம்மை மிகுந்த மகிழ்ச்சியடைய செய்துள்ளது. இந்தப் புதிய ஏவுகணை ஆகாயத்தில் 74 நிமிடங்கள் பயணித்து இலக்கை அடைந்தது. ஆகாயத்தில் நீண்ட நேரம் பயணிக்கும் வடகொரியாவின் ஏவுகணையாக இது கருதப்படுகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, கடந்த ஏப்ரல் மாதம் வட கொரியா சோதனை செய்த ஏவுகணை 6,648 கிமீ உயரத்தில் 1,001 கிலோமீற்றர் பயணித்து ஜப்பானின் கிழக்கு பகுதியில் விழுந்தது. இது, உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மீண்டும் ஏவுகணை தாக்குதல் பரிசோதனையில் கடந்த சில மாதங்களாக வடகொரியா ஈடுபட்டு வருகிறது

அமெரிக்கா - தென் கொரிய படைகள் கொரிய தீபகற்பத்தில் கடந்த சில மாதங்களாகவே இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், இரு நாடுகளும் மிகப் பெரிய இராணுவ பயிற்சிக்கு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் தான், வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவின் கொத்துக்குண்டுகள் உக்ரைன் நாட்டை சென்றடைந்தன

கீவ், ஜூலை 15

அமெரிக்கா வழங்கியுள்ள கொத்துக்குண்டுகளை பெற்றுள்ள உக்ரைன் அவற்றை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பயன்படுத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

தென்உக்ரைனில் உள்ள அதிகாரியொருவர் கொத்துக்குண்டுகள் கிடைத்துள்ளன என தனது தளபதி தெரிவித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

கொத்துக்குண்டுகள் சென்றடைந்துள்ளதை பென்டகனும் உறுதி செய்துள்ளது.

மொஸ்கோ இதனை கண்டித்துள்ளது.

கொத்துக்குண்டு தனக்கு எதிராக பயன்படுத்தப்பட்டால் தானும் அதனை பயன்படுத்த வேண்டியிருக்கும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.

ரஷ்யா தான் கைப்பற்றியுள்ள பெருமளவு நிலத்தில் கண்ணிவெடிகளை புதைத்துள்ளதால் கொத்துக்குண்டுகளை பயன்படுத்துவது நியாயமானது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

கொத்துக்குண்டுகள் ரஷ்ய படையினரை மேலும் மனச்சோர்வடையச்செய்யும் நிலைமையை உக்ரைன் படையினருக்கு சாதகமாக மாற்றும் என உக்ரைன் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சட்டத்திற்கு உட்பட்ட விதத்தில் உக்ரைனின் பகுதிகளை மீள ஆக்கிரமிப்பதற்கு கொத்துக்குண்டுகளை பயன்படுத்துவோம் என உக்ரைன் அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# டுவிற்றர் மூலமும் இனி வருமானம்!

நியூயோர்க், ஜூலை 15

யூ-ரியூப் போல டுவிற்றர் பயனாளர்களும் இனி விளம்பர வருமானம் மூலம் வருமானத்தை ஈட்டும் வசதி விரைவில் வரவிருக்கிறது.

மிகப்பெரிய தொழிலதிபர் எலான் மஸ்க், டுவிற்றர் நிறுவனத்தை வாங்கிய பிறகு அதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

ப்ளூ ரிக் பெறுவதற்கு பணம் செலுத்த வேண்டும் என்ற அறிவிப்பு பல விமர்சனங்களைப் பெற்ற போதிலும், பலரும் பணம் செலுத்தி ப்ளூ ரிக் பெற்றனர். ஆனால், அப்போதே, ப்ளூ ரிக் பெறுபவர்களுக்கு தகுதி அடிப்படையில் டுவிற்றர் விளம்பரம் மூலம் வரும் வருமானம் ஒரு பகுதியை பகிர்ந்துகொள்ளப் போவதாக அறிவித்திருந்தார் எலான் மஸ்க்.

இந்நிலையில், அதன்படி, ப்ளூ ரிக் பெற்ற பயனாளர்களுக்கு, விளம்பர வருவாயில் ஒரு தொகையை பகிரும் பணி தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐரோப்பா உள்ளிட்ட ஒரு சில நாடுகளில் மட்டுமே இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் இது பரவலாக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்

# ஜெய்ஸ்வால், ரோஹித் அதிரடி சதம் இந்தியா 162 ஓட்டங்கள் முன்னிலை



டொமினிகா, ஜூலை 15

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 312 ஓட்டங்கள் எடுத்துள்ளது இந்தியா. அறிமுக வீரர் ஜெய்ஸ்வால், அணித் தலைவர் ரோஹித் சர்மா அடுத்தடுத்து சதம் விளாசி அசத்தினர்.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளும் தற்போது இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றன.

டொமினிகாவில் புதன்கிழமை இரவு தொடங்கிய இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியானது 64.3 ஓவர்களில் 150 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதையடுத்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா, யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஜோடி சிறப்பான தொடக்கம் கொடுத்தது. முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் இந்திய அணி 23 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 80 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தை 70 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தொடங்கியது இந்திய அணி. முதல் விக்கெட்டுக்கு 229 ஓட்டங்கள் சேர்த்தனர் ஜெய்ஸ்வால் மற்றும் அணித் தலைவர் ரோஹித். 215 பந்துகளில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார் அறிமுக வீரர் ஜெய்ஸ்வால். தொடர்ந்து 220 பந்துகளில் சதம் பதிவு செய்தார் ரோஹித். இருந்தும் அடுத்த பந்தே அவர் ஆட்டமிழந்தார்.

இந்திய அணிக்காக ஒரே இன்னிங்ஸில் வெளிநாட்டில் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரும் சுமார் 8 ஆண்டுகளுக்கு பிறகு சதம் பதிவு செய்துள்ளனர். கடைசியாக கடந்த 2015இல் தவான் மற்றும் முரளி விஜய் இதை செய்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட வந்த ஷூப்மன் கில், 6 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த கோலி நிதானமாக ஆடி வருகிறார். 96 பந்துகளில் 36 ஓட்டங்கள் எடுத்தார். இதில் ஒரே ஒரு பௌண்ட்ரி அடங்கும். ஜெய்ஸ்வால், 350 பந்துகளில் 143 ஓட்டங்கள் எடுத்து விளையாடி வருகிறார். 14 பௌண்ட்ரிகள் அவரது இன்னிங்ஸில் அடங்கும்.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 312 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதன் மூலம் முதல் இன்னிங்ஸில் 162 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இந்தப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. (ஐ)

# அறிமுக போட்டியிலேயே சதம் கண்ட ஜெய்ஸ்வால்



டொமினிகா, ஜூலை 15

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் அறிமுக வீரராக களமிறங்கிய யாஷஸ்வி ஜெய்ஸ்வால் அறிமுக போட்டியில் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

215 பந்துகளைச் சந்தித்த ஜெய்ஸ்வால் 11 பௌண்ட்ரிகளுடன் தனது முதல் சர்வதேச சதத்தை பதிவு செய்தார்.

டொமினிகாவில் புதன்கிழமை தொடங்கிய முதல் டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 64.3 ஓவரில் 150 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது மேற்கு இந்தியத் தீவுகள் அணி.

இதன்பின், முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ரோஹித் சர்மா களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களை குவித்தனர்.

இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்த நிலையில் 215 பந்துகளைச் சந்தித்த ஜெய்ஸ்வால் 11 பௌண்ட்ரிகளுடன் சதம் விளாசினார். இதன் மூலம் அறிமுக போட்டியில் சதம் அடித்த 17ஆவது இந்திய வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன் ஷிகர் தவான், ப்ரித்வி ஷா போன்றோர் இந்த சாதனையை படைத்துள்ளனர்.

# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் வோண்ட்ரூசோவா இறுதியில்!



லண்டன், ஜூலை 15

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில் உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் செக் குடியரசு வீராங்கனையான மார்க்கெட்டா வோண்ட்ரூசோவா.

லண்டனில் நடைபெற்று வரும் இந்த தொடரில் நேற்று மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில் 42ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் மார்க்கெட்டா வோண்ட்ரூசோவா, 76ஆம் நிலை வீராங்கனையான உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினாவை எதிர்த்து விளையாடினார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய வோண்ட்ரூசோவா 6-3, 6-3 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். விம்பிள்டன் இறுதிப் போட்டிக்கு வோண்ட்ரூசோவா தகுதி பெறுவது இதுவே முதன் முறையாகும். (ஐ)

International Cricket Council

## ஐ. சி. சி. போட்டிகளில் இனி

# ஆண்கள், பெண்களுக்கு சமமான பரிசுத் தொகை

டர்பன், ஜூலை 15

சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் கிரிக்கெட் தொடர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளுக்கு சமமான பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் ஐ. சி. சி. ஆண்டுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில்தான் இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்திலும் சமமான பரிசுத் தொகை வழங்கப்படும் என்று ஐ. சி. சி. தலைவர் கிரெக் பார்க்லே தெரிவித்துள்ளார்.

"கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க தருணம். சமமான வெகுமதி வழங்கப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று கிரெக் பார்க்லே குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற மகளிர் இருபது - 20 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலியா ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை பரிசுத் தொகையாக பெற்றிருந்த நிலையில், நவம்பர் 2022இல் ஆண்கள் 20 இருபது உலகக் கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து, 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் பரிசுத் தொகையை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையை மேம்படுத்த இந்திய ஆதரவு தொடரும்

## தூதுவர் கோபால் பாக்லே உறுதி

கொழும்பு, ஜுலை 15

**“இலங்கையை பொருளாதார ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கத்தின் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும்.” -என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**

**கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்திய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.**




இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

இந்தியாவைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக இலங்கையில் வியாபாரம் செய்து வருகின்றனர். இந்த வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவுப் பாலத்தை உருவாக்க முடிந்துள்ளது. அது இலங்கை மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்தும் என நான் நம்புகிறேன்.

இலங்கை மக்கள் பாதிக்கப்பட்ட போதெல்லாம் அந்த மக்களுடன் இந்தியா இருந்தது. கடந்த ஆண்டு ஏற்பட்ட நிதி நெருக்கடியின் போது இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கு இந்திய அரசாங்கம் உட்பட வர்த்தக சமூகம் உதவிகளை வழங்கியது.

இலங்கை, தற்போது நிதி நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது என்றே கூற வேண்டும். நிதி நெருக்கடியின் போதும், இந்திய வர்த்தகர்கள் இலங்கையில் வியாபாரங்களை ஆரம்பித்து இலங்கையின் நிதி நிலைமை நன்றாக உள்ளது என்ற செய்தியை உலகுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

இலங்கையில் வர்த்தகம் செய்யும் இந்திய வர்த்தகர்களுக்கு கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையில் உள்ள அரசாங்கங்களின் ஆதரவு கிடைத்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறே ஆதரவளித்துள்ளார்.

இலங்கையை பொருளாதார ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் அபிவிருத்தி செய்ய இந்திய அரசாங்கத்தின் மற்றும் வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு வழங்கப்படும் என்பதை இங்கு நினைவுகூர்கிறேன். இது இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு வழங்கப்படும் வாக்குறுதி என்றே கூற வேண்டும்-என்றார். (அ)

# நாட்டின் சுகாதாரத் துறை பயங்கரவாதமாக மாறியுள்ளது

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 15

நாட்டின் சுகாதாரத் துறையில் பெரும் வீழ்ச்சியும் அனர்த்தமும் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். அத்துடன், நாட்டின் சுகாதாரத் துறை தற்போது பயங்கரவாதமாக மாறியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடு தற்போது எதிர்நோக்கி வரும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கும் பாராளுமன்றத்தின் 8ஆவது குழு அறையில் பாராளுமன்ற குழு ஒன்றை ஸ்தாபிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதி விரயம், மோசடி, திருட்டு, முறைகேடு, தரம் குறைந்த மருந்து, மருத்துவ உபகரணங்கள், தகவல்களை மறைத்தல், அரச அடக்குமுறை, அரச பயங்கரவாதம் போன்ற அனைத்து யுக்திகளையும் பயன்படுத்தி இலவச சுகாதாரக் கொள்கையை அழிக்கும் திட்டத்தில் அரசு ஈடுபட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



# கணித பாட நூல்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, ஜுலை 15

சுயமாக கற்கக் கூடிய கணித பாட பயிற்சி நூல்கள் அதிகஸ்ட பிரதேசத்தைச் சேர்ந்த முல்லைத்தீவு கோட்டை கட்டியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் தரம் 6 முதல் 11 வரையான சகல மாணவர்களுக்கும் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்நூல்களின் நூலாசிரியர்களான வி.குகநாதன், எஸ்.வி.. பாலமுரளி ஆகியோர் அண்மையில் நூல்களை பாடசாலை அதிபர் திருமதி.அ. கிருஸ்ணகுமாரிடம் அன்பளிப்பாக வழங்கியிருந்தனர். (அ)

# மொட்டு கூட்டத்தில் பங்கேற்காத கண்டி மாவட்டத்தின் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜுலை 15

பொதுஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்டத் தலைவர்கள் கலந்துகொண்ட, கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பான கூட்டத்தில் மாவட்டத்தின் மூன்று தலைவர்கள் பங்கேற்கவில்லை என சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் வீட்டில் கடந்த புதன்கிழமை இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனக் கூறப்படுகின்றது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம மற்றும் அனுராத ஜயரத்ன ஆகியோரே இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத அரசியல்வாதிகள்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் காரியவசம் கையொப்பமிட்ட கடிதத்தின் மூலம் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, ரோஹித அபேகுணவர்தன மற்றும் மாகாண சபை மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் பலரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எனினும் அன்றைய தினம் குறித்த மூவரும் பங்கேற்காத காரணத்தினால் எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் இது தொடர்பான சந்திப்பை மீண்டும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்சவின் ஆலோசனையின் பேரில் கட்சியின் எதிர்கால அரசியல் விவகாரங்கள் குறித்து தீர்மானம் எடுப்பதற்காக இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நிதி ரீதியான ஒழுக்கம் அவசியம்



## ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 15

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், நிதி ரீதியான ஒழுக்கம் அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வருமான மார்க்கங்களை உருவாக்குவதற்கான உத்திகளைக் கண்டறிவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டபோதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவால் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாத வகையில் காணப்படும் வருமான மார்க்கங்களை முறைமைப்படுத்துதல், புதிய வருமான மார்க்கங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றுக்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால யோசனைகளை உள்ளடக்கி ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் செலவிடும் ஒவ்வொரு ரூபாய்க்கும் அதிகபட்ச பெறுமதி பெற்றுக் கொள்ளப்ப டவேண்டிய தேவை உள்ள போதிலும், அரச செலவின கட்டமைப்பிற்குள் அவ்விடயம் இடம்பெறுவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரச வருமானத்தை மறந்து செயற்படுவது மாத்திரமின்றி, எந்தவொரு பிரதிபலனும் அற்ற செயல்பாடுகளுக்காக அரச நிதி வரையறையின்றி செலவிடப்படுகின்றமையும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக அமைந்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# உரத்தின் விலை குறைப்பு!

கொழும்பு, ஜுலை 15

50 கிலோகிராம் எடையுடைய எம்.ஓ.பி உர மூடையின் விலை குறைக்கப்படவுள்ளது.

இதற்கமைய இன்று முதல் அமுலாகும் வகையில் எம்.ஓ.பி உரம் ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படவுள்ளது.

15 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் 50 கிலோகிராம் உர மூடை இன்று முதல் 14 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

# சுகாதார அமைப்பை பலவீனப்படுத்துவோர் தொடர்பில் முறைப்பாடு அளிக்க தீர்மானம்

கொழும்பு, ஜுலை 15

சுகாதார அமைப்பை பலவீனப்படுத்துவதற்கு காரணமான தரப்பினர் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தில் முறைப்பாடு செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவது தொடர்பில் தமது கட்சி கவனம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கப்படுவதாக அவர் மேலும் கூறினார். (அ)

## வடக்கு சட்டத்தரணி...

மறுக்கிறேன்.

ஜூலை 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை கவனமாகக் கேளுங்கள்.

நமது நீதித்துறை சுதந்திரமாகவும் வெளிப்புற அழுத்தங்களிலிருந்து விடுபட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்கு தெரியும்.

அதற்கு வழக்கறிஞர்கள் சங்கம் விளக்கம் அளிக்கத் தேவையில்லை.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன் சில மாதங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் நமது உயர் நீதிமன்றத்தைப் பற்றி ஆற்றிய உரையை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாட்டின் உயர் நீதிமன்றம் மணிக் கூண்டுபோல் ஊசலாடுவதாக கூறினார்.

இது தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கம் ஏன் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை? இது நீதித்துறைக்கு கடுமையான அச்சுறுத்தல் இல்லையா? சட்டத்தரணிகள் சங்கம் சுமந்திரனுக்கு பயப்படுகிறதா? அத்துடன், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் மொனிகா பின்டோ, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டு நீதித்துறை தொடர்பில் முன்வைத்த அறிக்கையை நினைவுபடுத்த விரும்புகின்றேன். நமது நீதித்துறை மீது அவர் கூறிய சில அபத்தமான குற்றச்சாட்டுகள்.

1.நமது நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசு மற்றும் அரசியல் நியமனங்களை நாடுகின்றனர். எனவே, எதிர்கால வேலைகளுக்காக , வழக்குகளில் அரசாங்கத்துக்கு ஆதரவாக தீர்ப்புகளை வழங்குவதற்கான போக்கு அவர்களுக்குள்ளது.

2. ஒட்டுமொத்த நாட்டின் நீதித்துறையின் சுதந்திரம் படிப்படியாக சிதைந்து வருகிறது.

3. சட்டத்தரணிகள் சங்கம் அரசியல் ரீதியாக பிளவுபட்டுள்ளதுடன் சங்கம் அரசியல்மயப்படுத்தப்படுவதும் பாரதூரமான பிரச்னையாகும்.

4.நீதிபதிகள் பெரும்பாலும் குற்றவாளிகளை அவர்கள் முடிக்கக்கூடிய வழக்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்.

5.பொதுவாக நீதித்துறை நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் கண்ணியம் பற்றிப் பேசும் வழக்கறிஞர்கள் சங்கம், நமது நீதித்துறை குறித்து மொனிகா பின்டோ தாக்கல் செய்த மிகவும் கேவலமான அறிக்கைக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் நான் தானாக முன்வந்து (ஜூன் 18, 2014 அன்று) ஜெனீவாவுக்குச் சென்றேன்.

இருநூறு ஆண்டுகால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட நமது நீதித்துறையின் இந்த இழிவான மற்றும் இழிவான அறிக்கையை அந்த அமர்வில் வன்மையாகக் கண்டித்தேன்.

எட்டு நாள் இலங்கை விஜயத்தின் பின்னர், எமது நீதித்துறை திறமையற்ற, தவறாக தெரிவு செய்யப்பட்ட, ஊழல் வாதிகள் மற்றும் பக்கச்சார்பான நீதிபதிகளால் ஆனது என்று மொனிகா பின்டோ கூறுவதற்கு என்ன தகுதி உள்ளது என நான் ஜெனீவாவில் கேள்வி எழுப்பினேன்.

இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அறிக்கை என்று கூறி தேவைப்பட்டால் வெளிநாட்டு நீதிமன்றங்களுக்குக் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட நமது நீதிபதிகளின் தொழில் தகுதி மற்றும் முன்னேற்றம் குறித்து ஆராயுமாறும் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன்.

அப்படித்தான் அன்று எங்கள் நீதிமன்றத்தின் மானத்தைக் காப்பாற்றினேன். அப்போதுதான் நீங்களும் முல்லைத்தீவில் தற்போது எனக்கு எதிராக போராட்டம் நடத்தும் சட்டத்தரணிகளும் இந்த விடயத்தில் மௌனம் சாதிக்கிறீர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் பாராளுமன்றத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எமது பௌத்த பாரம்பரியத்தின் எச்சங்கள் எவ்வாறு குண்டர்களால் அழிக்கப்படுகின்றன என்பதை சட்டத்தரணிகள் சங்கம் வடக்குக்குச் சென்று பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்கால பௌத்த எச்சங்களை இடித்து சிவலிங்கத்தை வைத்து வழிபடும் முறையை அவதானிக்குமாறும் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

இடிபாடுகளை புனரமைக்கும் தொல்லியல் துறை அதிகாரிகளுக்கு கொலைமிரட்டல் விடுக்கப்படுவதுடன் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் மீது பொய் வழக்குப் போட்டு, புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறும் அதுவரை கட்டப்பட்டதை இடித்துத் தள்ளும் நிலையும் உள்ளது.

நாட்டின் சட்டத்தை நிறுவுவதே உங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தால், மோதலை ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற விடயங்களிலும் உங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

நாம் அனைவரும் நீதித்துறையை மதிக்கிறோம். ஆனால், நமது பாரம்பரியத்தை அழிக்கும் பிரிவினைவாத குண்டர்களுக்கு ஆதரவாக நிற்பதற்கு முன்பு வழக்கறிஞர்கள் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டத்தரணிகள் சங்கத்துக்கு தேசப்பற்று இருந்தால் இவற்றையும் கவனிக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

## சுகாதார..

மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு, அமைச்சராக உள்ள இவரின் இந்த பதிலை ஏற்றுக் கொள்ள முடியுமா?

தனது உறவினர்கள் ஊடாகவே, இவர் நாட்டுக்கு மருந்துகளைக் கொண்டுவருகிறார் என்று பலராலும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ராஜபக்ஷக்கள் எவ்வாறு தங்களின் உறவினர்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தார்களோ, அதேபோன்றுதான் சுகாதார அமைச்சரும் தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

மக்களுக்கு தரமான சுகாதார சேவையை வழங்க முடியாவிட்டால், சுகாதார அமைச்சர் உடனடியாக பதவிலியிருந்து இராஜினாமா செய்ய வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.

அப்படி செய்யாவிட்டால், எதிர்க் கட்சியினராகிய நாம் சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை பாராளுமன்றுக்கு கொண்டுவந்து, அவரை பதவியிலிருந்து வெளியேற்றுவோம்.

நாட்டில் வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். வைத்தியசாலைகள் மீதான நம்பிக்கை குறைவடைந்து கொண்டும் செல்கிறது.

இவை அனைத்துக்கும் சுகாதார அமைச்சர் பொறுப்புக்கூற வேண்டும்.

இதனை அவர் மேற்கொள்ள தவறுவாராயின், கோட்டாபயவை மக்கள் எவ்வாறு விரட்டியடித்தார்களோ, அதே நிலைமைதான் இவருக்கும் ஏற்படும்.

அதற்கு முன்னர், எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து அவரை பதவியிலிருந்து வெளியேற்றும்-என்றார் (அ)

# 13 குறித்து இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

"13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் - இந்தியாவின் வகி பாகமும்" பற்றிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் (யாழ். மத்திய கல்லூரி அருகே) நடைபெறவுள்ளது.

அதிகாரப் பகிர்வுக் கான இயக்கம், செல்வ நாயகம் நினைவு அறக் கட்டளை ஆய்வு நிறுவ னம் என்பன இணைந்து நடத்தும் இந்த கலந்து ரையாடலை யாழ். பல்கலைக்கழகத் தின் வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி நடத்தவுள்ளார். (ஐ)

## குருந்தூர்மலை...

முன்னெடுப்பதற்கான தயார்ப் படுத்தல்களில், ஆலய நிர்வாகத்தினரும், பொதுமக்களும் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையில், குருந்தூர்மலையில் நேற்றுக் காலை முதல், பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

அங்கு பிரவேசித்த குறித்த தேரர்கள் உள்ளிட்ட பெரும்பான்மையின சமூகத்தினர், பொங்கல் வழிபாட்டுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளனர்.

இதன்பின்னர், குறித்த இரு தரப்பினருக்கும் இடையே அமைதியின்மை ஏற்பட்டது.

ஆலயத்தில் பொங்கல் வைப்பதற்கு, பௌத்த தேரர்களும், பெரும்பான்மை சமூகத்தினரும், தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம், அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸார், பௌத்த தேரர்களும் ஆதரவாக செயற்பட்டதாக, ஆலய நிர்வாகத்தினரும், மக்கள் பிரதிநிதிகளும், சட்டத்தரணிகளும் குற்றம் சுமத்தினர்.

எவ்வாறிருப்பினும், ஆலய தரப்பினரும், பொதுமக்களும், பொங்கல் வைக்காமல், அமைதியான முறையில் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட முயற்சித்துள்ளனர்.

எனினும், பௌத்த தேரர்கள், அதற்கும் இடையூறு ஏற்படுத்தி எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதன்போது, அங்கு தொடர்ந்தும் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

இதன் பின்னர், பௌத்த தேரர்கள் உள்ளிட்ட பெரும்பான்மைச் சமூகத்தினர், பொலிஸாரால் இரண்டு பஸ்களில் பாதுகாப்பான முறையில் அனுப்பிவைக்கப்பட்டனரென தெரிவிக்கப்பட்டது.

எனினும், ஆதிசிவன் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு தொடர்ச்சியாக முயற்சித்த ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் உள்ளிட்ட தங்களை, பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றியதாக, பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் குற்றம் சுமத்தினர்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட தரப்பினர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டும் என சட்டத்தரணி காண்டீபன் தெரிவித்தார்.

அத்துடன், வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக, ஆதிசிவன் ஆலயத்திற்குச் சென்ற மக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த பொலிஸாரின் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## நீதிமன்ற...

கொண்டபோது ஏற்பட்ட இடையூறு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அடுப்பினை கற்பூரத்தை வைத்து மூட்டுகின்ற போது பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தனது சப்பாத்து காலினால் அந்த கற்பூரத்தினை அணைத்துள்ளார்.

முன்னர் இந்த நாட்டிலே இது ஒரு மொழி பிரச்னையாக இருந்தது, தற்போது மதப் பிரச்னையாக மாறிக் கொண்டு வரும் நிலையை இவர்கள் உருவாக்குகின்றார்கள். இவர்கள் இதனை வேண்டுமென்றே உருவாக்குகின்றார்கள் எனத்தான் நான் நினைக்கின்றேன்.

ஏனென்றால் இந்த நாட்டில் அமைதி இருக்கக் கூடாது, இந்த நாட்டில் பௌத்த கலாசாரங்கள்தான் இருக்கின்றன என எனக் காட்டுவதற்காக இந்த நிகழ்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இதனை முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே நாங்கள் எங்களால் இயன்ற அளவுக்கு முயற்சித்து இவைகளை நிறுத்துவதற்கு முயல்வோம்.

இந்தப் பகுதிகள் முழுமையாக அவர்கள் ஆக்கிரமிக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக ஊர் மக்களுடன் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக இருக்கின்றோம்.

ஆகவே நாங்கள் அனைவரும் முழுமையாக இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் நினைக்கின்றேன் ஒரே ஒரு சாத்வீகமான வழி தான் தற்போது இருக்கின்ற வழி. அந்த வழியிலே நாங்கள் நிகழ்ச்சிகளை முன்னெடுத்து இதை மீண்டும் தமிழ் சைவ மக்களுடைய ஆலயமாக மாற்ற வேண்டும்-என்றார். (அ)

## பொங்கல்...

வழிபாடுகளை தடுத்தமை தொடர்பிலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன் ஆகியோரால் இந்த முறைப்பாடு நேற்று மாலை பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## பொது வாக்கெ...

க்கு செல்வோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான காணியைப் பெற்றுத்தருமாறு, நான் யாழ். மாவட்ட செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதன் மூலம் ஆள் கடத்தலை தடுக்கவும், பல்வேறு கடத்தல்களில் சிக்குபவர்களை தடுக்கவும், தொழில் வாய்ப்புகளுக்கு பயிற்சி பெற்றாத வர்களுக்கு பதிலாக பயிற்சி பெற்றவர்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்லவும், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு தேவையான விழிப்புணர்வு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் செயல்பட்டு வருகிறோம்.

கொழும்புக்கு வந்து எமது அமைச்சின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய அனைத்து சேவைகளையும் நாம், நீங்கள் கொழும்புக்கு வராமல் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்குகின்றோம்.

ஊழியர் சேமலாப நிதி , ஊழியர் நம்பிக்கை நிதி தொடர்பான பிரச்னைகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பான விடயங்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சகத்தின் தூதரகத் துறையின் சேவைகள் முதலானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் இங்கு செய்யப்பட்டுள்ளன-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# முல்லைத்தீவு மனிதப் புதைகுழி 20ஆம் திகதி தோண்டப்படலாம்!

முல்லைத்தீவு, ஜூலை 15

முல்லைத்தீவு மாவட்டம், கொக்கிளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் தோண்டப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தோண்டுவது தொடர்பில் நேற்று முன்தினம் நடந்த கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாயில் குடிதண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்காக வீதியோரம் குழி தோண்டியபோது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டுவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தப் புதைகுழியின் நீள அகலத்தை இனம் காணும் பொருட்டு நடந்த பூர்வாங்கப் பணிகளின்போது 13 மனிதர்களுடையவை என்று கருதப்படும் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. அதைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டிருந்த பணிகளை மீண்டும் தொடங்குவது குறித்தும், பணிகளின் தராதரத்தைப் பேணுவது தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், சட்டத்தரணிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மனிதப் புதைகுழி கணப்படும் இடத்தில் தேவையற்ற வகையில் அதிக புலனாய்வாளர்கள் நடமாடுவது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேநேரம் இனிவரும் காலத்தில் இடம்பெறும் அகழ்வுப் பணியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தொல்லியல்துறை மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

அகழ்வுப் பணிகளின்போது சர்வதேசப் பிரதிநிதிகள் பிரசன்னம் அவசியமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி புலனாய்வாளர்களில் தேவையானோர் தவிர்ந்த ஏனையோரின் நடமாட்டம் அகழ்வுப் பணிகளின்போது கட்டுப்படுத்தப்படும் என்று உறுதியளித்தார். அகழ்வுப் பணிகளில் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்களுக்குப் பதிலாக தொல்லியல் பீடத்தின் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை இணைக்க முடியும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

அகழ்வுப் பணிகளுக்காகச் சர்வதேசப் பிரதிநிதிகளைத் தன்னால் நேரில் அழைக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதிபதி, ஆனால் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாமாகக் கண்காணிப்புப் பணிகளுக்கு முன்வந்தால் தடுக்கப்படமாட்டார்கள் என்றும் அறிவித்தார்.

(அ)

# ஹரி ஆனந்தசங்கரிக்கு இலங்கை வீசா மறுப்பு!

கொழும்பு, ஜூலை 15

கனடாவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, தனக்கு இலங்கை அரசாங்கம் வீசா வழங்க மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் பக்கத்தில், பதிவொன்றை இட்டுள்ள ஹரி ஆனந்தசங்கரி, தான் செய்யும் பணியின் காரணமாக விசா மறுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

'சுதந்திரமான பேச்சு, அரசாங்கத்துக்கு பொருத்தமாக இருக்கும்போது அது அனுமதிக்கப்படுகிறது. கொடும்பாவிகளை எரிப்பதால், தொடர்ச்சியான இலங்கை அரசாங்கத்தின் தோல்விகளை சரி செய்ய முடியாது.

வருந்தத்தக்க வகையில், இலங்கை அரசாங்கம் எனது விசாவை மறுத்துவிட்டது. இது நாம் செய்யும் பணிக்கான பழிவாங்கல். நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம், ' என்று அவர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# சினோபெக் எரிபொருள் ஒப்பந்தம் கைச்சாத்து!



கொழும்பு, ஜூலை 15

சினோபெக் எனர்ஜி லங்கா பிரைவட் லிமிடெட் இலங்கை முதலீட்டுச் சபையுடன் எரிபொருள் விநியோகத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் சினோபெக் எனர்ஜி நிறுவனம் இலங்கையில் எரிபொருளை விநியோகிக்கவும், எரிபொருளை சேமிக்கவும் மற்றும் எரிபொருள் நிலையங்களை அமைக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

இதற்காக நிறுவனம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்து அதன் மூலம் இலங்கையில் 50 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவி தற்போதுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இணைக்கும் வலையமைப்பை செயற்படுத்தவுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# தாமதமற்ற மருந்து வழங்கலை உடன் உறுதி செய்யவேண்டும்!

சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஜூலை 15

மக்களுக்கு மருந்துகள், தாமதமின்றி வழங்கப்படுவதை சுகாதார அமைச்சு உறுதி செய்ய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ள மருந்துகளின் அளவு மற்றும் நாளாந்தம் பெறக்கூடிய மொத்த மருந்துகளின் தரவுகளை, சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த செயல்முறை, வைத்தியசாலைகளுக்கிடையே மருந்துகளை பரிமாறிக்கொள்ள உதவுதாக ஜனாதிபதி கூறினார்.

(அ)

# வடக்கில் வகுப்பறைகள் சிறியவை ஆசிரியர் ஓய்வறைகள் பெரியவை

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் வகுப்பறைகள் சிறிதாகவும் ஆசிரியர்களின் ஓய்வறைகள் பெரிதாகவும் காணப்படுவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் உபசெயலாளர் ஹொல்வின் குலசேகரன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆசிரியர் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆசிரியர் இடமாற்றம் உரிய முறையில் இடம்பெற வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் பிரகாஸ் சுட்டிக்காட்டினார்.

(அ)

# தேர்தல் ஒன்று நடந்தால் ஐ.தே.கவுக்கு நான்கு ஆசனங்கள் மட்டுமே கிடைக்கும்

என்கிறார் எஸ். எம்.மரிக்கார்

கொழும்பு, ஜூலை 15

எதிர்காலத்தில் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு நான்கு ஆசனங்கள் மாத்திரமே கிடைக்கும் என கருத்து கணிப்பொன்றில் தெரியவந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த கருத்து கணிப்பை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் மீது இடி விழுந்தாலும் மொட்டுக் கட்சியினருக்கு அமைச்சு பதவிகளே தேவைப்படுகிறது. ஐக்கிய தேசியக்கட்சி கருத்து கணிப்பொன்றை நடத்தியுள்ளது. இதில் அந்த கட்சிக்கு நான்கு ஆசனங்கள் மாத்திரமே கிடைக்கும் என தெரியவந்துள்ளது.

இதனால், இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதை பின்னுக்கு தள்ளி விட்டு, கட்சியின் அதிகார சபைகளை பயன்படுத்தி அஸ்வெசும தருகிறோம் வாக்குறுதிகளை வழங்க உள்ளனர்.

பாராளுமன்றத்தை கலைத்தால், ஐக்கிய மக்கள் சக்தி கட்டாயம் வெற்றி பெறும் என்று ஜனாதிபதிக்கு தெரியும் என்பதாலேயே ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணியை அமைத்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடதயாராகி வருகிறார்.

நாட்டை விற்று சாப்பிட்டு மொட்டுக் கட்சியுடன் முன்நோக்கி செல்ல முடியாது. பொருளாதாரம் இவர்களுக்கு புரிவதில்லை - என்றார்.

(அ)

# வடதாரகை பயணிகள் படகு நேர ஒழுங்கில் திடீர் மாற்றம் பயணிகளுக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான வடதாரகை பயணிகள் படகு நேர ஒழுங்கு நேற்றுத் திடீரென மாற்றப்பட்டதால் அதில் பயணிக்கவிருந்த பயணிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கேற்பவர்களின் வசதிக்காக வடதாரகை பொது போக்குவரத்து நேர ஒழுங்கு மாற்றப்பட்டமையால் அங்கு செல்வதற்காக வழமையான நேரத்திற்கு குறிகாட்டுவான் வந்த பயணிகள் பலரும் பாதிப்படைந்தனர்.

இதன் காரணமாக நெடுந்தீவுக்குச் செல்லவிருந்த பொதுமக்கள், வயோதிபர்கள், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கிக் காலை 8 மணிக்கு பயணமாகும் வடதாரகை பயணிகள் படகு நேற்று நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 6.30 மணிக்கும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கி காலை 7.30 மணிக்கும் சேவையில் ஈடுபட்டது.

அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட பலரும் வடதாரகை படகில் பயணத்தை மேற்கொண்டனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்படையினரின் விசேட படகில் பயணத்தார்.

வழமையான பயண நேரமான 8 மணிக்கு வடதாரகை பயணிகள் படகில் பயணிக்க வந்தவர்கள் நீண்ட நேரம் காத்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

(அ)

# சுவிஸ் தூதரக ஊழியருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

கொழும்பு, ஜூலை 15

சி.ஐ.டியினரால் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டதாக பொய்யான அறிக்கையை வெளியிட்ட குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட சுவிஸ் தூதரக ஊழியர் கானியா பன்னிஸ்டர் பிரான்சிஸ் என்பவருக்கு 2 வருட சிறைத்தண்டனையை 5 வருடங்கள் ஒத்திவைத்து கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் 2019 இல் பதிவாகியுள்ளது.

கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து, நாட்டைவிட்டு வெளியேறிய குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரி நிசாந்த சில்வாவின் வீசா விவரங்களை கோரி, தான் கடத்தப்பட்டார் என்று கானியா குறிப்பிட்டிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.